# இராசராசேச்சுரம்





ஆசிரியர்

நடன. காசிநாதன்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
சென்னை - 600 008
2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

தஞ்சைப் பெருவுடையார் கோயில்
ஆயிரம் ஆண்டு நிறைவு விழா - சிறப்பு வெளியீடு

# இராசராசேச்சுரம்

ஆசிரியர்
**நடன. காசிநாதன்,** எம்.ஏ.,

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600008.
2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

இரண்டாம் பதிப்பு - 1994
மூன்றாம் பதிப்பு - 2010 / திருவள்ளுவர் ஆண்டு 2041
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
வெளியீடு எண். 96
5000 பிரதிகள்

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

இராசராசேச்சுரம்

ஆசிரியர்
நடன. காசிநாதன்

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

விலை ரூ. 16.00

அச்சிட்டோர்
இராயப்பேட்டை எழுதுபொருட்கள் மற்றும் அச்சு சார்
உபபொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்
26, கோயா அருணகிரி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014

**அட்டைப்படம் :**
முன் அட்டை: தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானம்
பின் அட்டை : நந்தி மண்டபம் - தஞ்சைப் பெருவுடையார் கோயில் வாயிற்கோபுரங்கள்

# பதிப்புரை

தஞ்சைத் தரணியில், தமிழுலகம் பெருமைப்படத் தக்க வகையில் நடத்தப்பெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, இச்சிறு நூல் இரண்டாம் பதிப்பாக வெளிக் கொணரப்படுகிறது.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு பார் புகழ கோலோச்சியவன் சோழ மன்னன் முதலாம் இராசராசன்.

அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப்பெற்ற பெருமன்னன் இராசராசன். சோழர் குலத்தின் புகழையும், பெருமையையும் எட்டுத்திக்கிலும் பரப்பியவன்.

இவன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் சோழப் பேரரசின் வலிமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் அழியாச் சின்னம். இக்கோயிலின் சிற்ப எழிலையும், கட்டடக்கலைச் சிறப்பையும் பாமர மக்களும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் 'இராசராசேச்சுரம்' என்ற பெயரில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் முக்கியமானதாகக் கருதப்படும் ஏழு கல்வெட்டுகளின் கருத்துக்கள் எளிதாக்கப்பட்டு இந்நூலில் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்காணும் கல்வெட்டுகள் பற்றிய குறிப்பு தயாரிப்பதில் எனக்கு உறுதுணையாகவிருந்து பல்லாற்றானும் உதவிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறை பேராசிரியர் டாக்டர். சுப்ராயலு அவர்களுக்கும், இந்நூலை அழகிய முறையில், மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

அன்பன்

**நடன. காசிநாதன்**

இயக்குநர்

# இரண்டாம் பதிப்புரை

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் அரசியல், கலை, கட்டடக் கலை ஆகியவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. குறிப்பாக கட்டடக் கலையின் சிறப்புக்கு இன்றளவும் சான்றாக விளங்கிக் கொண்டிருப்பது சோழ மாமன்னன் இராசராசன் எடுப்பித்த 'தஞ்சைப் பெருவுடையார்' கோயிலாகும். இதன் பெருமையை அனைவரும் அறிந்துக்கொள்ளும் வகையில் எளிய நடையில் 'இராசராசேச்சுரம்' என்னும் இந்நூல் தொல்லியல் துறையின் மேனாள் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் பற்றியும் அக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படும் சிறப்பான செய்திகளை எடுத்தியம்பிருப்பது சிறப்பாகும்.

'தஞ்சைப் பெருவுடையார் கோயில்' எடுப்பிக்கப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி இந்நூலினை மறுப்பதிப்பாக வெளியிடுவதில் தொல்லியல் துறை பெருமையடைகிறது.

இந்நூலிற்கான பதிப்புப்பணியில் ஈடுபட்ட கல்வெட்டாய்வாளர் திரு. கி. சு. சம்பத், மற்றும் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும் இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப் படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர்கள் திருமதி தே. சத்தியவதி, திருமதி கு. கோகிலா மற்றும் அச்சுப்பிழைத்திருத்திய திரு. மா. ஆ. சங்கர் அவர்களுக்கும் எனது பாராட்டுகள். மற்றும் இந்நூலை வெளியிட உரிய நிதியினை அளித்திட்ட தமிழ்நாடு அரசிற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொல்லியலாளர்கள், வரலாற்று ஆர்வலர்கள், அறிஞர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்நூலினை படித்து பயன்பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை-8 **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

18-06-2010 முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# இராசராசேச்சுரம்

## பெருவுடையார் கோயில்

செந்தமிழ்த் திருநாட்டில் கலைவளர்த் தொட்டிலாக விளங்கும் தஞ்சைத் தரணியில் சோழர்களின் பொற்காலத்தையும், கலைச் சிறப்பையும் எட்டுத் திக்கும் கொட்டி முழக்கி எழிலான தோற்றத்தில் வானளாவ உயர்ந்தோங்கி நிற்கும் கலைப் பெட்டகம்தான் இராசராசேச்சுரம். இந்திய நாட்டின் வடஎல்லையாகத் தலைநிமிர்ந்து நிற்கும் இமயத்தை வடநூலார் மேரு என அழைப்பர். தென் தமிழ் நாட்டிலும் இமயம் ஒன்று உண்டு. அதுதான் தென்திசை மேரு எனக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் இராசராசேச்சுரம். இக்கோயிலைப் பெருவுடையார் கோயில் என்று கல்வெட்டுக்கள் பெருமையோடு கூறும். அதையே பிரகதீசுவரர் கோயில் என்று வடமொழியில் கூறுவர். பெருவேந்தன் முதலாம் இராசராசன் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி ஓங்கு புகழ் பெற்று எவ்வாறு விளங்கினானோ அதேபோன்று இந்தியத் திருநாட்டிலேயே ஈடு இணையில்லாத ஒரு கோயிலை எடுப்பிக்க எண்ணினான். தன் தலைநகரிலேயே அதைக் கட்டி முடித்தான். பெருமன்னனாகத் தான் எவ்வாறு விளங்கினானோ அதே போன்று பெரும் உடையாரைக் (லிங்கத்தை) கோயிலில் அமைத்திடச் செய்தான். அதனாலல்லவோ இக்கோயில் பெருவுடையார் கோயிலென்று இன்றும் அழைக்கப் பெறுகிறது.

## இதை கட்டுவதற்கு எவ்வளவு காலம்?

இக்கோயிலை இராசராசன் தன் பத்தொன்பதாவது ஆட்சியாண்டில் கட்ட ஆரம்பித்து இருபத்தைந்தாவது ஆட்சியாண்டில் முடித்தான் என்று கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. இருப்பினும் இதைச் சிலர் சந்தேகிக்கின்றனர். அவன் ஆறு ஆண்டுகளில் முடித்தானா அல்லது மேலும் சில ஆண்டுகள் கழிந்தனவா என்பது தெரியவில்லை. எப்படி இருப்பினும் உலகோர் வியக்கும் வண்ணம் உன்னதக் கோயிலைத் தன் வாழ்நாளில் உருவாக்கியிருக்கிறான். என்னே அம்மன்னனின் கலை ஆர்வம்! எண்ணியெண்ணி இறும்பூதெய்துகிறோம்.

## எங்கிருந்து கற்கள் வந்தன?

இவ்வரிய கோயிலை முழுவதும் கருங்கற்களாலேயே கட்டியிருக்கிறான். பொன்னி நாடான சோழநாடு மருதநிலப் பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிஞ்சி நிலப் பகுதியைக் காண மேற்குத் திசையில் உள்ள திருச்சிப் பகுதிக்குத்தான் செல்ல வேண்டும். அப்பகுதியிலிருந்துதான் இவ்வளவு கற்களையும் கொண்டு வந்தானோ? அவ்வாறெனில் எந்த வாகனத்தில் கொண்டு வந்தான்? மாட்டு வண்டிகளிலா அல்லது யானைகளின் உதவியாலா? எவ்வாறோ வெளியிடத்திலிருந்துதான் கொண்டு வந்திருக்கிறான். அது மட்டுமல்ல, அப்பொருட்களை எவ்வாறு கோயிலின் மேற்பகுதிக்குக் கொண்டு சென்றான்?

## சாரம் அமைத்தா? மண்மேடு அமைத்தா?

தஞ்சையிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள சாரப்பள்ளம் என்ற ஊரிலிருந்து கோயில் கட்டும் இடம்வரை

சாரம் அமைத்துக் கற்களை உருட்டி மேலே ஏற்றினார்கள் என்று கதை வழங்குகிறதே உண்மையா? இருக்க முடியாது என்கின்றனர் சிலர். கோயில் விமானத்தை எடுக்கையில் கோயிலைச் சுற்றி மண்மேடு அமைத்துக்கொண்டு கற்களை மேலே கொண்டு செல்வர் என்றும் கட்டுமானப் பணி முடிந்ததும் மண்ணை அகற்றி விடுவர் என்றும் கூறுகின்றனர். அவ்வாறு கோயிலைச் சுற்றி மண்மேடு அமைத்திருந்தாலும் கற்களை மேலே எடுத்துச் செல்லுகையில் கழிகளால் சாரம் அமைத்துக் கொண்டு அதன் துணையோடுதான் கற்களை ஏற்றினர் என்பது தில்லையிலுள்ள சிவகாமியம்மன் கோயில் முகமண்டப விதானத்தில் காணப்பெறும் விசயநகர கால ஓவியம் மூலம் தெரிய வருகிறது.

## *எவ்வளவு ஆழத்திற்கு அடித்தளம்?*

உப பீடத்திலிருந்து தூபி வரை 216 வரை அடி உயரமுடைய இப்பெருங் கோயிலை அமைக்க எவ்வளவு ஆழத்துக்கு அடித்தளம் அமைத்திருப்பான்! இவ்வாறு நினைத்துப் பார்ப்பது இயல்பே. ஆனால் உண்மையில் நீண்ட ஆழத்தில் அடித்தளம் அமைத்ததாகத் தெரியவில்லை. குறைந்த அளவு ஆழத்திற்கே அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இயற்கையான கற்பாறையின் மீது அடித்தளம் அமைத்திருப்பதால் தான் இவ்வளவு பெரும் பாரத்தை தாங்கும் சக்தி அதற்கு உள்ளது.

## *இராசராசன் திருவாசல்*

கிழக்குத்திசை நோக்கி நிற்கும் இப்பெருங்கோயில் இரண்டு பெரும் சுற்றுச் சுவர்களை உடையதாக இருந்திருக்க வேண்டும். இன்று ஒரு சுற்றுச்சுவர் தான் உள்ளது.

இத்திருச்சுற்றின் கீழ்த்திசையில் அமைந்திருக்கும் கோபுரம் 'இராசராசன் திருவாசல்' என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறது. இதற்கு முன்புள்ள கோபுரம் 'கேரளாந்தகன் திருவாசல்' என்று கூறப்படுகிறது.

## திருச்சுற்று மதில்

கீழ்த்திசையில் காணப்பெறும் முதற்கோபுரத்தின் (கேரளாந்தகன் திருவாசல்) வழியே உள்ளே சென்றால் இரண்டாம் கோபுரத்தை (இராசராசன் திருவாசல்) அடையலாம். இக்கோபுரத்தின் இரு பக்கங்களிலும் இரு பெரும் துவாரபாலகர்கள் அணி செய்கின்றனர். வடக்குப் பக்கம் உள்ள துவாரபாலகரை அடுத்துக் காணப்பெறும் மதிற்சுவரில் 'வள்ளி திருமணம்', 'கிராதார்ச்சுன கதை', 'காமதகனம்', 'கண்ணப்பர் கதை' ஆகியவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. தெற்குப் பக்கத்தில் துவாரபாலகரை அடுத்துள்ள சுவர்ப் பகுதியிலும் 'மார்க்கண்டேயர் புராணம்', 'பார்வதி பரமசிவன் திருமணம்', 'சண்டீசன்' ஆகியவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாயிலின் மேற்புறச் சுவரில் வடக்குப் பக்கத்தில் பிக்ஷாடனர், கஜஸம்ஹார மூர்த்தி, அர்த்தனாரி ஆகிய உருவங்களும் தெற்குப் பக்கத்தில் திரிபுராந்தகர் கதையும் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. இக்கோபுரத்தை உள்ளடக்கிய சுற்றுமதில் இரு மாளிகைகளை உடையதாகக் காட்சியளிக்கிறது. ஆதலால் கல்வெட்டில் 'இரட்டைத் திருமாளிகை' என்று வழங்கப்பெறுகிறது. இத்திருமதில் கிழக்கு மேற்கில் 800 அடி நீளமும் தெற்கு வடக்கில் 400 அடி அகலமும் உடையதாக விளங்குகிறது. இத்திருச்சுற்று மாளிகையில் திசைக் காவலர்களுக்கான

ஆலயங்களும், பரிவார தேவதைகளின் ஆலயங்களும் காணப்படுகின்றன. நான்கு மூலைகளில் நான்கு திசைக் காவலர்களுக்கான சிற்றாலயங்களும், தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கத் திருமாளிகைகளின் நடுவில் மூன்று திசைக் காவலர்களுக்கான சிற்றாலயங்களும் அமைக்கப்பெற்றுள்ளன. இவையன்றி, பரிவார தேவதைகளுக்கான சிற்றாலயங்களும் மாளிகையைச் சுற்றிக் காணப்படுகின்றன. திசைக் காவலர்களுக்கான சிற்றாலயங்கள் இருதள விமானம் உடையதாகத் தோற்றமளிக்கின்றன.

### *திசைக் காவலர்களின் சிற்றாலயங்கள்*

அக்கினிக்கென உள்ள விமானத்தின் மீது நான்கு செம்மறி ஆடுகளும், எமனுக்கென உள்ள விமானத்தின் மீது நான்கு எருமை மாடுகளும், நிருதிக்கென உள்ள விமானத்தின் மீது படுத்த நிலையில் நான்கு மனித உருவங்களும், வருணனுக்கென உள்ள விமானத்தின் மீது நான்கு மகரங்களும், வாயுவுக்கென உள்ள விமானத்தின் மீது நான்கு மான்களும், குபேரனுக்கென உள்ள விமானத்தின் மீது நான்கு கீரிப்பிள்ளைகளும், ஈசானனுக்கென உள்ள விமானத்தின் மீது நான்கு காளை மாடுகளும் காணப்படுகின்றன. இந்திரனுக்கென உள்ள சிற்றாலயம் கோபுரத்தோடேயே இணைந்து தோற்றமளிக்கிறது. பரிவார தேவதைகளுக்கு 28 சிற்றாலயங்கள் உள்ளன. இவை இரண்டடுக்கு மண்டபங்களாக இருந்தன.

### நந்தி

இத்திருச்சுற்று மாளிகையின் வழியே உள்ளே சென்றால் நாயக்கர் கால மண்டபத்துள்ளே இருக்கும் எழிலான நந்தியைக்

காணலாம். இம்மண்டபத்தின் இரு தூண்களில் நாயக்க மன்னர் இருவரின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. தனது கால்களை மடக்கிப் படுத்த நிலையில் தன் தலைவனையே எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கும் நந்தி, சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற மேடையில் காணப்படுகிறது. பெருவுடையாருக்கேற்ற பெருநந்தி ஒரே கல்லால் ஆக்கப்பெற்று உன்னதத் தோற்றத்தோடு விளங்குகிறது. பத்தொன்பது அடி நீளமும் பன்னிரண்டு அடி உயரமும் உடையதாகக் காணப்படுகிறது. இந்நந்தி பிற்காலத்தில் அமைக்கப்பெற்றது. சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற நந்தி தற்பொழுது திருச்சுற்று மாளிகையில் உள்ளது.

### மகா மண்டபம்

நந்தி மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் கிழக்குத் திசையில் உள்ள படிக்கட்டுகளின் மூலமாகவோ, தெற்குப் பக்கப் படிக்கட்டுகள் மூலமாகவோ, அல்லது வடக்குப் பக்கப் படிக்கட்டுகள் மூலமாகவோ மகா மண்டபத்தை அடையலாம். கீழ்த் திசையில் உள்ள படிக்கட்டுகள் பிற்காலத்தில் அமைக்கப்பெற்றவை. மகாமண்டபத்தின் நுழைவாயிலில் இருபக்கங்களிலும் துவாரபாலகர்கள் நிற்கின்றனர். நுழைவாயிலின் வழியே உள்ளே சென்றால் இருபத்து நான்கு தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கும் மகாமண்டபத்தின் வனப்பைக் காணலாம். இம்மண்டபத்தின் மேற்குப் பக்கச் சுவரும் தெற்குப் பக்கச் சுவரும் இணையும் இடத்தில் மண்டபத்தின் மேல் பகுதிக்குச் செல்லும் மாடிப்படிகள் உள்ளன. மேலே சென்றால் தற்பொழுது மொட்டைமாடியாகக் காணப்படுகிறது. ஆனால் இப்பகுதியில் அர்த்த மண்டபத்தின் மேலுள்ளதைப் போன்று மூன்று தளங்கள் அமைந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

## அர்த்தமண்டபம்

மகாமண்டபத்தின் மேற்புற வாயில் வழியாக உள்ளே சென்றால் அர்த்தமண்டபம் காணப்பெறும். இம்மண்டபம் மூன்று தளங்களை உடையது. அர்த்தமண்டபத்தின் அகலமும் விமானத்தின் ஆதி தளத்தின் அகலமும் சமமாக இருக்கிறது. அர்த்தமண்டபத்தின் தெற்குப் பக்கத்திலுள்ள மாடங்களில் விநாயகர் தம் தேவியருடனும், திருமால் தம் தேவியர்களுடனும் உள்ள சிற்பங்கள் காணப்படுகின்றன. வடக்குப் பக்கத்தில் உள்ள மாடங்களில் துர்கை, வீரபத்திரர் ஆகியோரது சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் முழுதும் முற்றுப்பெற்ற நிலையில் வடிக்கப்பட்டவைகளாகத் தோன்றவில்லை.

மேற்குப் பக்கச் சுவரில் வெளிப்புற மாடங்களில் தெற்குத் திசையில் கஜலட்சுமி சிற்பமும், வடக்குத் திசையில் நாமகள் சிற்பமும் காணப்படுகின்றன. நாமகள் சிற்பத்தின் கீழே கருவூர்த்தேவரும் இராசராசனும் அமர்ந்திருக்கும் வகையில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் உண்ணாழியின் மேற்குச் சுவரின் வெளிப்பக்கம் தீட்டப்பட்டுள்ள வண்ண ஓவியங்களில் காணப்படும் கருவூர்த்தேவர் மற்றும் இராசராசன் உருவங்களைப் போன்றே தோற்றமளிக்கின்றன.

## இடை நாழி

அடுத்து இடைநாழி அல்லது இடைக்கட்டு உள்ளது. இதன் கூரையானது தூண்களால் தாங்கப் பெற்றிருக்கின்றன. இவ்விடைநாழியின் நுழைவாயில் இரு துவாரபாலர்களால் அணி செய்கிறது. இப்பகுதியின் மேலுள்ள இரண்டாம் தளத்தின்

வழியாக விமானத்தின் உட்பகுதியை அடையலாம். அத்தளத்தில் உள்ள சாந்தார நாழியில் இறைவன் ஆடிய 108 வகைத் தாண்டவ கரணங்களைப் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கமுற்பட்டு பெரும் பகுதி முடிக்கப்பட்டும், சிறு பகுதி முடிக்கப்படாமலும் இருப்பதைக் காணமுடியும்.

## படிச்சுவர் சிற்பங்கள்

இடைநாழியைத் தெற்குப் பக்கத்திலிருந்தும் வடக்குப் பக்கத்திலிருந்தும் படிக்கட்டுக்கள் மூலமாகவும் வந்து அடையலாம். தெற்குப் பக்கப் படிக்கட்டின் கிழக்குப் பக்கக் கைப்பிடிச் சுவரின் வெளிப்பக்கத்தில் சில சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சில மிகவும் குறிப்பிடத் தக்கவை. தெற்குப் பக்கக் கோடியில் உள்ள போதி மரத்தின் கீழ் அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் உருவமும், நிற்கும் நிலையில் உள்ள மற்றொரு புத்தர் உருவமும் சிவன் கோயிலில் எவ்வாறு இடம்பெற்றன என்பது அறிஞர்களைச் சிந்திக்க வைத்தது. முதலாம் இராசராசன் பிற மதங்களிடத்துக் காட்டிய அன்பிற்கு அடையாளம்தான் இச்சிற்பங்கள் என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் இச்சிற்பங்கள் இக்கோயிலின் உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவரில் பக்கம் தீட்டப்பட்டுள்ள வண்ண ஓவியமான திரிபுர சம்ஹாரத்தைச் சித்திரிப்பதாகக் கூறுகின்றனர்.

இங்கு காணப்படும் புடைப்புச் சிற்பங்களில் மூன்று வகையான விமானத்தை அதாவது நாகர, திராவிட, வேசர வகை விமானங்களைக் காணமுடிகிறது. அவை அரக்கர்களின் மூன்று கோட்டையைப் பிரதிபலிக்கின்றன என்றும், வில்லேந்தி நிற்கும் உருவம் சிவபெருமான் திரிபுராந்தகர் உருவில் உள்ளார்

என்றும் அவ்வரக்கர்களைத் தண்டிக்க அவர் தயங்குகிறார் என்றும் கூறப்படுகிறது. காரணம், அவர்கள் தீவிர சைவப் பற்றாளர்கள் என்பதாலாகும். அவ்வரக்கர்களின் கையில் சிவலிங்கம் ஏந்தியிருப்பதைக் காணலாம்.

இவர்கள் எப்படியாவது சிவபெருமானால் அழிக்கப்படல் வேண்டும் என்ற நோக்கத்தில் திருமாலானவர் மாய அவதாரமான புத்த அவதாரம் எடுத்து அவர்களைத் தம் மாய வலையில் சிக்க வைக்க முயற்சிக்கிறார். அவர்கள் இவரது மாயத் தன்மைக்குப் பலியாகாமல் தீவிர சைவப் பற்றாளர்களாகவே இருந்து விடுகின்றனர். ஆனால் மற்றவர்கள் திருமால் விரித்த மாய வலையில் வீழ்ந்து சிவனால் அழிக்கப்பட்டு விடுகின்றனர். இந்தக் கருத்தைத்தான் இச்சிற்பங்கள் புலப்படுத்துகின்றன என்று கே. ஆர். சீனிவாசன் கூறுகிறார். உண்ணாழிச் சுவரில் ஓவியமாகவும், இங்கு புடைப்புச் சிற்பமாகவும் ஏன் காட்டப்பட்டுள்ளன என்றால் இராசராசன் திரிபுராந்தகரைப் போன்ற ஒரு மாவீரன் என்றும், அவன் சேர, சோழ, பாண்டிய நாடுகளான மூன்று நாடுகளையும் வென்றவன் என்று புலப்படுத்துவதற்காகவே என்றும் அவர் விளக்கம் தருகிறார்.

### இராசராசேச்சுரர்

இடைநாழியைக் கடந்து உள்ளே சென்றால் எவ்வுயிர்க்கும் அருள்பாலிக்கும் இறைவனை-ஈசனை இலிங்க வடிவில் பார்க்கலாம். மும்முடிச் சோழனாகிய இராசராசன் முப்புரமெரித்த விரிசடைக் கடவுளுக்கு அமைத்த பெருங்கோயிலில் மூலவராக அமர்ந்திருக்கும் காட்சியைக் காணலாம். அளப்பரிய பொன்னையும் மணியையும் கொண்டு

வந்து இறைவனின் திருவடித் தாமரை மலர்களிலே சொரிந்து அவனது அருள் வேண்டி, அன்று பெருமன்னன் இராசராசன் வணங்கினானே அந்த காட்சி! நம் கண்முன் நிழலாடும். கருவூர்த் தேவர் திருவிசைப்பா பாடி நித்தம் இறைவனைப் போற்றிப் பூசித்தாரே! அந்த எண்ணம் மேலோட்டம் எழும். அரசமாதேவியர்களும் அமைச்சர்களும் மற்ற அரசு அதிகாரிகளும் தம் வேந்தன் அனைத்துச் செய்கைகளிலும் வெற்றி பெற வேண்டும் என்று இறைவனை வேண்டி நின்றார்களே அந்தக் காட்சி மனக்கண் முன்னே நிழலாடும். நாள்தோறும் காலையில் இறைவன் திருமுன்பு திருப்பதியம் பாடி மகிழ்ந்தார்களே அந்த இசைக் கலைவாணர்கள் நம் மனக்கண் முன்னே காட்சியளிப்பர். அவர்கள் பாடிய தேவாரப் பாடல்கள் நம் காதுகளிலே தேனாகப் பாய்ந்து மகிழ்ச்சியூட்டும்.

## பெருவுடையார்

உண்ணாழிகையின் உள்ளே காணப்பெறும் பெருவுடையார், இந்தியாவில் காணப்படும் அனைத்து இலிங்கங்களிலும் மிகப் பெரியதாக உள்ளது. இதற்கடுத்துப் பெரிய இலிங்கம் கங்கைகொண்டசோழபுரத்து பிருகதீச்சுரர் கோயிலில் காணப்படுவதாகும். தந்தையான முதலாம் இராசராசனும் மகனான முதலாம் இராசேந்திரனும் தங்களது ஆற்றலுக்கும், வீரத்துக்கும், பெருஞ்சிறப்புக்கும் எடுத்துக் காட்டாகப் பெரிய அளவில் பெருவுடையாரை எழுந்தருளச் செய்து வழிபட்டிருக்கின்றனர். இலிங்கத்தின் உச்சியில் நீராட்ட வேண்டுமெனில் அர்ச்சகர் ஒரு மேடை மீது நின்றுதான் நீராட்டவேண்டும். அந்த அளவு உயரமுடையதாகக் காணப்படுகிறது.

இலிங்கத்துக்கேற்ற ஆவுடையார். இதுவும் அளவில் மிகப் பெரியது. இலிங்கத்தின் அளவுக்கேற்பக் கோயிலின் விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது. விமானத்தின் உட்புற அழகைப் பார்க்க வேண்டுமானால் விமானத்தின் இரண்டாம் தளத்திலிருந்து பார்த்தல் வேண்டும். விமானத்தின் அளவு சிறுகச் சிறுகக் குறைந்து மேலே செல்லும் எழிலைக் காணும் போது சோழர் காலத்தியக் கட்டடக்கலை வல்லுநர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

### உட்திருச்சுற்று

உண்ணாழியைச் சுற்றி உட்திருச்சுற்று உள்ளது. இங்கு செல்லவேண்டுமானால் இடைநாழியில் உள்ள தெற்குப் பக்கப் படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கிச் சிறிது தூரம் மேற்கே நடந்தால் ஏணிப்படிகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இப்படிகள் வழியே ஏறி உயரே சென்றால் உண்ணாழித் திருச்சுற்றின் தெற்குப் பக்கத்தை அடையலாம். உண்ணாழிச் சுவரின் (அந்தரப்பித்தி) வெளிப்பக்கத்தில் காணப்படும் உள்ளடங்கிய பகுதியில் அகோர வடிவில் உள்ள சிவபெருமான் எதிரே காட்சி தருவார். அமர்ந்த நிலையில் இரண்டு திருக்கரங்களுடன் காட்சி அளிப்பார். பீடத்தில் இடக்காலை மடக்கி வலதுகாலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலை. வலக்கரம் வாள் ஏந்தியும் இடக்கரம் திரிசூலத்தைப் பிடித்த வண்ணமும் உள்ளன. தலையில் சடை முடியும், காதுகளில் சர்ப்பகுண்டலங்களும் அணி செய்கின்றன. இரு பக்கங்களிலும் இரு துவாரபாலகர்கள் காணப்படுகின்றனர். மேற்குப் பக்கமாக உள்ளே சென்றால் உண்ணாழிச் சுவரில் பைரவர், ஆலமர் செல்வன் ஆகியோரது உருவங்கள் வண்ண

ஓவியங்களால் தீட்டப்பெற்று விளங்குகின்றன. இவை இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளாக எழில் மாறாமல், வண்ணம் அழியாமல் காட்சியளிப்பதைக் காணலாம்.

## ஆடலரசி

வடக்குப் பக்கம் திரும்பினால் முதலில் கண்ணில் படுவது உண்ணாழியில் மூலை அரைத்தூணில் தீட்டப்பட்டிருக்கும் நடன மங்கையின் உருவமாகும். இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கிச் சதுர தாண்டவ அமைப்பில் வைத்து, இடக்கையை மடக்கி, வலக்கையை நீட்டி, முகத்தை இடது தோள் பக்கம் வளைத்துத் தன்னை மறந்து ஆடுபவளாகத் தீட்டப்பட்டிருக்கும் ஓவியம் இங்கு காணப்பெறும் எல்லா ஓவியங்களிலும் சிறந்த ஓவியமாகும். அவளது முன்னங்கைகளில், செருகிய வளையல்களும், மேல்கைகளில் தோள் வளைகளும், கால்களில் பாதச் சங்கிலி மற்றும் தண்டைகளும், கழுத்தில் அட்டிகையும் அணிந்தவளாய்க் காணப்படுகிறாள். தலையிலே பெருங்கொண்டை அலங்காரம் அதில் மலர் சூட்டப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அவள் அதிர வீசி ஆடும் ஆட்டத்திலே இடையிலே அணிந்திருக்கும் ஆடை நான்கு திக்கும் பறக்கிற தன்மையில் காட்டப்பட்டுள்ளது. அவளது வலப்பக்க மார்பகம் தீட்டப்பட்டிருக்கும் பாங்கும், உடல் வளைந்திருக்கும் கோலமும், இடக்காலின் பாதம் ஊன்றப்பட்டிருக்கும் தன்மையும் அவள் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அடுத்த சுற்றின் தொடக்கத்தில் இருப்பது போன்ற அமைப்பில் உள்ளது. சோழர்கால ஓவியனின் திறமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஓவியம் சிறிதளவு சிதைவுற்ற நிலையில் காணப்படுவதாலும், திரிபங்க நிலையில்

காணப்படுவதாலும் நாட்டிய மகளின் முகபாவத்தை முழுமையாக அறிந்துகொள்ள இயலவில்லை. திரிபங்க நிலையில் வரையப்பட்டிருக்கும் இவ்வோவியம் இடது காலின் பெருவிரலிலிருந்து ஒரு நேர்க்கோடு வரைந்தால் முகத்தின் தாழ்வாய்க்கட்டைக்குச் செல்கின்ற நேர்த்தியைக் காணமுடிகிறது. கற்றுத் துறைபோகிய ஓவிய வல்லான் ஒருவன் தீட்டிய ஓவியக் களஞ்சியமாகவே இவ்வோவியம் காணப்படுகிறது என்று கூறினால் வெறும் புகழ்ச்சியில்லை. உண்மை! உண்மை!! மறுக்க வொண்ணா உண்மை!!!

### சுந்தரர் வரலாறு

நலத்தான் சிறந்து விளங்கிய திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர்த் திருப்பதியில் வாய்மை குன்றாத திருமறையவர் பலர் வாழ்ந்து வந்தனர். அவருள் மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் சடையனார் என்பவர்க்கும் இசைஞானியார் என்ற அம்மையாருக்கும் நம்பியாரூரர் திருஅவதாரம் செய்தார்.

நாடாளும் வேந்தன் நரசிங்கமுனையனென்பான் பிள்ளைப் பருவத்திலிருந்தே நம்பியாரூரரை அவரது பெற்றோர் களிடமிருந்து பெற்று, சொந்தப் பிள்ளையாக எண்ணி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். நம்பி ஆரூரர் தமது இளமைப் பருவத்திலேயே எல்லாக் கல்வி நலங்களையும் பெற்றுத் திகழ்ந்தார். மணப்பருவம் வந்தது. பெற்றோர்கள் பெண் பார்க்கத் தலைப்பட்டனர். புத்தூர் என்னுமூரில் சடங்கவி என்ற அந்தணர் குலப்பெண்ணை மணம் பேசினர். மணநாள் வந்தது. மண மகனை அலங்கரித்து வீதி உலா அழைத்துச் சென்றனர். அழைத்துச் செல்கையில் கண்ணுற்ற மக்கள் கூட்டம் என்ன செய்தது என்பதை,

'கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காணவென்பார்
பெண்களிலுயர நோற்றாள் சடங்கவி பேதை யென்பார்
மண்களிகூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோமென்பார்
பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடுவார்கள்'

என்று தடுத்தாட்கொண்ட புராணத்தில் விவரிக்கப்படுகிறது.

## தடுத்தாள வரும் இறைவன்

அவ்வாறு நிகழும் மக்களின் எண்ண அலைகளினூடே உலாச் சென்று மணம் நிகழவிருந்த மணப்பந்தரை அடைகிறார் நம்பி ஆரூரர். வேதியர் வேதம் ஓத எத்தனிக்கின்றனர். மறையவர் கூட்டம் இந்த ஒப்பரும் நிகழ்ச்சியைக் கண்ணுறக் குழுமிய வண்ணம் இருக்கிறது. அப்பொழுது முதியவர் ஒருவர் உள்ளே நுழைகிறார். நுழைந்தவர் மணத்தொழில் தொடங்கும் பந்தரிடை நம்பியின் எதிரில் நின்று 'இந்த மொழி கேண்மின் எதிர் யாவர்களும்' என்கிறார். அங்கு அமர்ந்திருந்த அருமறை அந்தணர் யாவரும் ஆச்சரியத்தால் தலை நிமிர்த்தி 'நன்றுமது நல்வரவு இவண் நீர்மொழிமின் நீர் மொழிவ' தென்றார். யான் ஒரு வழக்கினைக் கூறப்போகிறேன். அவ்வழக்கைத் தீர்த்த பின்னர் உம் கடமையை ஆற்றுங்கள் என்று வந்தவர் கூற, உமது வழக்கைக் கூறுங்கள். அது முடிந்த பின்னரே வதுவையை ஆரம்பிப்போம் என்றனர் அவையில் குழுமியிருந்தவர்களும்.

உடனே 'இந்நாவலூரன் எனது அடிமை' என்று இவ்வுலக உயிர்கள் அனைத்தையும் ஆட்கொண்டு விட்ட இறைவனாகிய அம்முதியவர் கூறினார். இவர் உமது அடிமையெனில் ஆதாரம் ஏதேனும் உண்டோ என்று மறையவர்கள் வினவ, இந்நாவலூரனின் பாட்டன் எழுதிய 'ஆள்விலை ஓலை' இதோ

உளது என்று கூறி அதை அவையின் கரணத்தான் முன் நீட்டுகிறார். அவையின் கரணத்தான் அவ்வோலையை வாங்கிச் சுருளைப் பிரித்து நன்றாக விரித்து, எழுதியுள்ள வாசகங்களை அவையில் படிக்கிறான். அவையோரும், நாவலூரரும் ஆச்சரியத்தால் பதுமையாகின்றனர். பின்னர் அவையோர் ஆரூரரைப் பார்த்து 'நீர் தோற்றீர்' இம்முனிவர்க்குப் 'பான்மையினேவல் செய்தல் கடன்' என்று விளம்புகின்றனர். 'விதிமுறை யிதுவே யாகில் யான் இதற்கு இசைகிறேன்' என்று நாவலூரரும் உடன்படுகிறார். பின்னர் இறைவன் தாம் யார் என்பதைத் தெரிவித்து நாவலூரரை இல்லற வாழ்வில் நுழையவிடாது தடுப்பதே தமது நோக்கம் என்று கூறி ஆட்கொண்டார் என்கிறது தடுத்தாட்கொண்ட புராணம்.

### நீதிமன்றம்

இப்புராணத்தைச் சித்திரிக்கும் ஓவியத்தில் மண்டபம் காட்டப்பட்டுள்ளது. மண்டபம் சாதாரண மண்டபம் அல்ல. பல தோரணங்கள் நிறைந்த மண்டபம். தோரணத்தின் நடுவில் இருநிலை மாடம் தீட்டப்பட்டிருக்கிறது. தோரணத்தின்கீழ் வரி காணப்படுகிறது. வரியையும் தோரணங்களையும் தாங்கி ஐந்து தூண்கள் நிற்கின்றன. மூன்று தூண்கள் நடுவிலும், இரண்டு தூண்கள் சுவரோடு ஒட்டியும் தீட்டப்பட்டுள்ளன. தூண், போதிகை, தாமரை இதழ் விரிந்த நிலையில் காணப்பெறும் பலகை ஆகியவைகளை உடையதாக இருக்கின்றன. தூணின் அமைப்பும் தோரணத்தின் எழிலுமே இது சோழர்கால ஓவியம் என்பதைத் தெளிவாக்கி விடுகின்றன.

மண்டபத்தின் நடுவில் மறையவர்கள் பலர் கூடியிருக்கின்றனர். அனைவரும் அமர்ந்த நிலையில் உள்ளனர்.

முதியோராய் அமர்ந்திருப்போரின் கைகளில் ஓலைச்சுவடி காணப்படுகிறது. அந்த ஓலைச்சுவடிகள் வழக்கு மன்றத்தில் சந்தேகம் ஏற்படும்பொழுது பார்த்துக் கொள்வதற்கு உதவும் சட்ட நூல்களாக இருக்கலாம். மறையவர்கள் அனைவரும் அரையில் மட்டும் ஒரு வெண் துகில் உடுத்தியிருக்கின்றனர். அதுவும் முழங்கால் அளவுக்கே நீண்டுள்ள பஞ்சகச்சமாய்க் காட்சியளிக்கிறது. தோளில் ஒரு வெண் துகில் மட்டுமே காணப்படுகிறது. ஒவ்வொருவர் மார்பிலும் பூணூல் காணப்படுகிறது. அனைவரும் குடுமி உடையவராய்ப், பெரும்பாலோர் தாடி, மீசை உடையவராய்க் காட்சி அளிக்கின்றனர். நெற்றியில் திருநீறு காணப்படுகிறது. இவை அவர்கள் சிவாச்சாரியர்கள் என்பதைத் தெரிவிக்கின்றன.

இவர் மத்தியில் முதியவர் ஒருவரும், இளையவர் ஒருவரும் நேருக்குநேர் நிற்கின்றனர். முதியவர் அரையில் கோவணத்தையும், தோளில் வெண்துகிலைப் பூணூல் அணிவது போன்று சுற்றியும் அணிந்திருக்கின்றார். தலைமயிர், தாடி ஆகியவை நரைத்து அவ்ருடைய முதுமைத் தன்மையைப் பறைசாற்றுகின்றன. குழையணியத்தக்க தாழ்ந்த காதுகளைக் கொண்டிருக்கிறார். வலது கையில் விரித்த ஓலையும். இடது கையில் குடையுமாய் நேரே நிற்க முடியாது சிறிதே கூனி நிற்கிறார். கண்களிலே ஒரு கம்பீரப் பார்வை. வாய் ஏதோ சொல்லும் நிலை. சித்திரத்தில் தீட்டப்பட்டுள்ள இந்த உருவையும் தடுத்தாட்கொண்டபுராணத்தில்,

> 'காதிலணி கண்டிகை வடிந்த குழை தாழச்
> சோதிமணி மார்பிலசை நூலினொடு தோளின்
> மீதுபுனை யுத்தரிய வெண்டு கினுடங்க
> ஆதபம் மறைக்குடை யணிக்கரம் விளங்க

பண்டிசரி கோவண உடைப் பழமை கூரக்
கொண்டதோர் சழங்கலுடை யார்ந்தழகு கொள்ள
வெண்டுகிலுடன் குசை முடிந்து விடு வேணுந்
தண்டொருகை கொண்டு கழல் தள்ளு நடை கொள்ள'

என்று கூறப்பட்டிருக்கும் சிவபெருமானின் முதுமைத் தன்மையையும் ஒப்பு நோக்கினால், இவ்வுருவத்தைப் பார்த்துத்தான் சேக்கிழார் பெருமான் பாடிப் பரவசமானாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நம்பி ஆரூரர் பார்த்தாரைப் பரவசப்படுத்தும் பருவத்தினராய், களை ஒழுகும் முகத்தினராய், அழகே உருவாய்க் காட்சி அளித்தார் என்றெல்லாம் தடுத்தாட்கொண்ட புராணம் பேசும்.

இவ்வோவியத்திலும் அவரது அழகு பொருந்திய உருவம் மிக உன்னத நிலையில் தீட்டப்பட்டுள்ளது. ஆனால் அவரது நிலை மிகவும் அஞ்சி நடுநடுங்கி என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கும் நிலையாக உள்ளது. சுந்தரர் நிற்கும் தோற்றத்தைக் காண்கையில் அவர் வழக்கில் தோற்றுவிட்டார் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

## வழக்கில் தீர்ப்பு

முதியவராய் வந்த இறைவனின் கையில் ஒரு ஓலையும், சிவாச்சாரியர்களின் கையில் ஒரு ஓலையும் காணப்படுகின்றன. இதில் சிவாச்சாரியர்களின் கையில் உள்ள ஓலை அவையிலே முதியவரைப் பார்த்து நீவிர் கூறுவதற்கு ஆதாரமாக,

'ஆட்சியில் ஆவணத்திலன்றி மற்றயலார் தங்கள்
காட்சியின் மூன்றிலொன்று காட்டுவாய்'

என்று மறையவர்கள் கேட்க, முதியவரும் தாம் வைத்திருந்த ஓலையை எடுத்துக்கொடுத்து நீங்கள் இதிலே காணலாம் என்று காட்ட, அதை வாங்கிப் பார்க்கின்ற ஓலையாக இருக்கலாம். அதை பார்த்த மறையவர்கள் அனைவரும் திகைக்கின்றனர். ஒருவரையொருவர் வியப்போடு பார்த்துக் கொள்கின்றனர். சிலர் சுந்தரரைப் பார்க்கின்றனர். கரணத்தான் கையிலே தரப்பட்டிருக்கின்ற ஓலையில் 'இப்படி அறிவேன் (இர)வேளைப் பகலாக' என்று சோழர் கால எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வெழுத்துக்களும் அவ்வோவியம் சோழர் காலத்தைச் சார்ந்தது என்பதை நிரூபிக்கின்றன. எழுத்துகள் காணப்படும் அப்பகுதி, ஓலையின் இறுதிப் பகுதியாகும். ஓலையிலே சாட்சிகளாகக் கையொப்பமிட்டுள்ள பகுதியாகும். எனவே இதைக் கண்ணுற்ற அனைவரும் ஒப்புக்கொண்டு சுந்தரர் முதியவரின் அடிமைதான் என்று தீர்ப்பளித்து விடுகின்றனர்.

முதியவரின் கையில் காணப்படும் மற்றொரு ஓலை, முதலிலே கொடுத்த ஓலையைச் சுந்தரர் கைப்பற்றிக் கிழித்து எறிந்தவுடன் 'அந்த ஓலை ஒன்று தான் உளது என்று எண்ணாதே. அது வெறும் நகல் தான். மூல ஓலை இங்கு என்னிடமே உள்ளது' என்று காட்டும் மூல ஓலையாக இருக்கலாம்.

### ஓவியச் சிறப்பு

இவ்வாறு ஓவியத்தின் வாயிலாக ஒரு உன்னத நிகழ்ச்சியைப் படைத்துக் காட்டியுள்ள அவ்வோவியனின் திறனை எவ்வாறு புகழினும் தகும். வழக்காடும் நிகழ்ச்சியையும், மறையவர்களும், சுந்தரரும் என்ன

செய்வதென்று அறியாமல் திகைக்கும் திகைப்பையும், முதியவர் தம் வழக்கு வெற்றி பெற்றது கண்டு பெருமிதத்தோடு நிற்கும் நிலையையும் காண்கையில் ஓவியன், தான் கேள்வியுற்ற பெரியபுராணப் பாடலுக்கு வடிவம் தந்தானா? அல்லது அவன் வடித்தெடுத்த வண்ண ஓவியத்துக்கு ஏற்பப்பாட்டமைந்ததா? என்ற ஒரு சந்தேகத்தைத் தூண்டி விடுகிறது இந்த எழிலார்ந்த ஓவியம். காலம் கருதின் ஓவியம் தான் முதலில் தீட்டப்பட்டிருக்க வேண்டும்.

## திருமணச் சமையல்

சுவரின் கீழ்ப்பகுதியில் சுந்தரரின் திருமணத்துக்காக உணவு சமைக்கும் காட்சி இயற்கையாகக் காட்டப்பட்டுள்ளது. உணவு சமைப்பதில் பெண்டிரும், ஆடவரும் ஈடுபட்டுள்ளனர். அடுப்பின் அமைப்பு இன்றைக்கும் கிராமபுறங்களில் காணப்பெறும் அடுப்பைப்போல் உள்ளது. மூன்று கால்களையுடைய முக்காலிகளின் மீது சில பாத்திரங்கள் வைக்கப்பெற்றுள்ளன. சில, இரு வளையங்களை உடையதாகவும், சில வளையங்கள் இல்லாதனவாகவும் இருக்கின்றன. இப்பாத்திரங்கள் தற்காலத்திய அண்டா, தவலைப்பானை போன்று காணப்படுகின்றன. இவையன்றிச் சில சட்டுவம், கிண்ணம், மதுக் குப்பிகள் ஆகியவைகளும் காணப்படுகின்றன. ஒரு பக்கத்தில் ஒரு பெண் குப்பியிலிருந்து மதுவையோ அல்லது நீரையோ ஊற்றுவது போன்றும், மற்றொருத்தி கிண்ணத்தில் பெறுவது போன்றும், மற்றொருத்தி அருந்துவது போன்றும் தீட்டப்பட்டுள்ளன. குப்பிகள் மூடிகளையுடையவையாகக் காணப்படுகின்றன. அடுப்பில் விறகிட்டு எரிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. பெண்கள் சேலையால் தங்களது மார்பை மறைத்திருப்பதையும் காணமுடிகிறது.

## சுந்தரர், இறைவனின் அடிமை

அடுத்த பகுதியில் வழக்கில் வெற்றிபெற்ற சிவனடியார் பெருமிதத்தோடு திருவெண்ணைநல்லூர் கோயிலுக்குச் செல்வதும், அந்தணர் ஒருவர் அவரைப் பின் தொடர்வதும் காட்டப்பட்டுள்ளது. திருவெண்ணெய்நல்லூர் கோயிலும் அழகாகத் தீட்டப்பட்டிருக்கிறது. சுந்தரரின் உருவம் அழகுவாய்ந்த வாலிபத்துடன் காணப்படவில்லை. தவக்கோலச் சுந்தரைக் காண்கிறோம். சுந்தரர் இறைவனின் அடிமையாகி விட்டார் என்பதை இது காட்டுகிறது.

## சுந்தரரும், சேரமானும் கையிலாயமலைக்குச் செல்லல்

இவைகளுக்கு மேற்பகுதியில் சுந்தரர் யானை மீதும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீதும் கையிலாய மலைக்குச் செல்லும் காட்சி காணப்படுகிறது. இவர்களது வருகையை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்கும் காட்சியும், ஒரு பக்கத்தில் நடராசர் சன்னதி முன் சுந்தரர் அமர்ந்து இறைவனை வழிபடும் காட்சியும் தீட்டப்பட்டுள்ளன.

இவைகளுக்கும் மேல் பகுதியில் உலகநாயகன் உமையோடு கையிலாயமலையில் அமர்ந்திருக்கும் கோலம் அம்மையப்பர்க்கு முன்பாக சுந்தரர் வழிபடல் ஆகியவை காணப்படுகின்றன.

## தத்புருசர்

இப்பகுதியைக் கடந்து சென்றால் சிவனது சதுரதாண்டவ சிற்பத்தைக் காண்கிறோம். இது சிவபெருமானின் தத்புருச வடிவம் என்கின்றனர். பத்துக் கரங்கள் உள்ளன. இடது மேற்கரம் கஜஹஸ்தத்திலும் வலது கீழ்க்கரம் அபயத்திலும்

காட்டப்பட்டுள்ளன. வலது இரண்டாம் கரத்தில் திரிசூலமும், மூன்றாம் கரத்தில் வாளும், நான்காம் கரத்தில் வேலும், ஐந்தாம் கரத்தில் கதையும், இடது இரண்டாம் கரத்தில் கபாலமும், மூன்றாம் கரத்தில் கேடயமும், நான்காம் கரத்தில் பாசமும், ஐந்தாம் கரத்தில் திரிசூலமும் காணப்படுகின்றன. தலையில் ஜடாமகுடமும், காதுகளில் சிம்மகுண்டலமும் அணி செய்கின்றன. அரையில் உள்ள ஆடை, தாம் ஆடும் நடனத்தில் நாற்புறமும் பறப்பது போல் காணப்படுகிறது. சுற்றிலும் பிரபை. சிவபெருமானின் இடப்பக்கம் உமை நின்ற கோலத்தில் காணப்படுகிறார். வலப்பக்கத்தில் பூதகணங்களும், குடமுழா வாசிக்கும் அடியாரும் உள்ளனர். சிவபெருமானின் உருவம் வண்ணம் பூசப்பெற்றுக் காட்சி அளிக்கிறது. மராட்டியர் காலத்தில் தங்கத்தால் முலாம் பூசியிருக்கின்றனர். அத்தங்க முலாம் தற்போதும் சில இடங்களில் காணப்படுகிறது.

## ஆடவல்லான்

அதைப் பார்த்துவிட்டு மேலும் வடக்கு நோக்கிச் சென்றால் உண்ணாழியின் மேற்குப்புறச் சுவரில் ஒரு பக்கத்தில் சிற்றம்பலத்தில் ஆடவல்லானின் உருவம் தீட்டப்பட்டுள்ளது. ஆடவல்லானின் அருகில் காளி தாண்டவமாடும் நிலையில் காணப்படுகிறது. எதிர் அம்பலத்தில் நின்று பேரரசன் இராசராசனும் அவனது தேவியர்களும் ஆடவல்லானை வழிபடும் காட்சியும் வரையப்பட்டுள்ளது. நடராசர் ஆலயத்தின் நான்கு பக்க வாயில்களும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. இவ்வாயில்கள் சாலை விமானத்தைக் கொண்டு சேர நாட்டுக் கலை அழகில் தோற்றமளிக்கின்றன. இராசராசனின் தேவியர் மெல்லிய ஆடை (மேலாடை உட்பட) அணிந்து காணப்படுகின்றனர். கைகளில் செருகு வளையல்கள்,

கழுத்திலும், இடுப்பிலும் முத்துமாலை, கால்களில் தண்டை, கொலுசு ஆகியவை அணிந்து அழகே உருவாகக் காட்சியளிக்கின்றனர். காவலர்கள் சிலர் இரு கழுத்துப் பட்டியுள்ள திறந்த சட்டையையும், சிலர் ஒரு கழுத்துப் பட்டியுள்ள திறந்த சட்டையும், இடுப்பில் தொடை வரை கீழ்ஆடையும் அணிந்து காணப்படுகின்றனர். கைகளில் நீண்ட கம்பு வைத்துள்ளனர்.

## முடிபுனை விழாவா? கோயில் மங்கல நீராட்டா?

இச்சுவரின் எதிர்ச் சுவரில் ஒரு பெரும் விழாக் காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. இக்காட்சி பெரிய கோயிலின் மங்கல நீராட்டு விழாக் காட்சியென்றும், மாமன்னன் இராசராசனின் முடிசூட்டு விழாக் காட்சி என்றும் இருவிதமாகக் கூறப்படுகிறது. ஒரு பக்கம் அரச குடும்பத்தினரும், மறுபக்கம் குடிமக்களும் அமர்ந்து இப்பெருவிழாவைக் காண்பதைப் போன்று ஓவியன் தீட்டியுள்ளான். நடன மங்கையர் நாட்டியமாடி விழாவுக்கு சிறப்பூட்டுகின்றனர்.

## இராசராசனும், கருவூர்த் தேவரும்

இவைகளைப் பார்த்துவிட்டு கீழ்ப்பக்கம் திரும்பினால் உண்ணாழியின் மூலைத் தூணில் இராசராசனும் கருவூர்த் தேவரும் ஏதோ பேசிக்கொண்டிருப்பதைப் போன்ற ஒரு காட்சி தீட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இவ்வரும்பெருங் கோயிலை எழுப்பிய மாமன்னன், இறைவன் உறையும் உண்ணாழியின் புறச்சுவரில் தன் உருவைத் தீட்டி இறைவனின் அணுக்கத் தொண்டன் என்பதை மெய்ப்பித்திருக்கிறான். இரு

மகளிர் ஒருவரோடொருவர் உரையாடிக் கொண்டிருக்கும் காட்சி மற்றும் இரு மகளிர் அமர்ந்த நிலையில் உரையாடும் தோற்றம், இப்படிப் பல காட்சிகளைக் காண முடிகின்றது.

## முப்புரமெரித்த முதல்வர்

தொடர்ந்து கிழக்குப் பக்கம் சென்றால் உண்ணாழியின் வடபுறச் சுவரில் தீட்டப்பட்டிருக்கும் திரிபுராந்தகர் உருவத்தைக் காணலாம். சிவன் திரிபுரம் எரித்த கதை வண்ண ஓவியமாகக் காட்சி தருகிறது. இந்நிலவுலகத்தைத் தேராகவும், சூரிய சந்திரர்களைத் தேர்ச் சக்கரங்களாகவும், நந்தி தேரை இழுத்துச் செல்லும் வாகனமாகவும், பிரம்மாவைத் தேரோட்டியாகவும் கொண்டு வலக்காலைக் குத்திட்டு வைத்து இடக்காலை மடக்கிப் போருக்குச் செல்லும் சிவபெருமானின் உருவம் மிக அற்புதமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. சிவனுக்குத் துணையாகப் பார்வதி தன் சிம்ம வாகனத்திலும், விநாயகர் மூஞ்சுறு மீதும், முருகன் மயில் மீதும் அமர்ந்து போருக்குச் செல்கின்றனர். இவர்களைக் கண்ணுற்ற மூன்று அரக்கர்களின் போர் வீரர்களும் புறமுதுகிட்டோடும் காட்சி தத்ரூபமாக வரையப்பட்டுள்ளது. அரக்கர்களின் வீரர்களுக்கும் பூதகணங்களுக்கும் நிகழும் போரில், அரக்கரின் வீரர்கள் பலர் வெட்டுண்டு விழும் காட்சி மிக அழகாகத் தீட்டப்பட்டுள்ளது.

## புத்தர் காண காரணம்

மூன்று கோட்டைகளையும் உடைய அரக்கர் தலைவர்கள் தங்கள் கைகளில் இலிங்கத்தை ஏந்தி நிற்கும் காட்சியும், அவர்களின் எதிரில் புத்தர் அமர்ந்திருக்கும் காட்சியும் சுவரின் மேற்பகுதியில் காணப்படுகிறது. இவைகளுக்குரிய விளக்கத்தைக் கீழ்வருமாறு கே. ஆர். சீனிவாசன் அவர்கள் கூறுகிறார்.

மூன்று கோட்டைகளுக்கும் உரிய அரக்கர்கள் சைவத்தில் ஆழ்ந்த பற்றாளர்களாக இருந்து இலிங்கத்தை வழிபட்டு வந்ததால், சிவபெருமான் தம் அடியவர்களை அழிப்பதற்குத் தயங்கினார் என்றும், ஆதலால் முனிவர்கள் காக்கும் கடவுளான திருமாலிடம் சென்று முறையிடுகின்றனர். மாயோனாகிய திருமால் புத்த அவதாரம் எடுத்து புத்த மதத்துக்கு அவர்களை மாற்ற முயற்சித்தார் என்றும் அப்பொழுதும் அவர்கள் மாறாமல் சைவப் பற்றாளர்களாகவே இருந்த காரணத்தால் சிவபெருமான் அவர்களை அழிக்காமல் அவர்களது கோட்டைகளையும் அவர்களது வீரர்களையுமே அழித்தார் என்றும் விளக்குகிறார்.

## இராவணனுக்கு அருளல்

இச்சுவருக்கு எதிர்ச்சுவரில் இலங்கை வேந்தன் இராவணன் கயிலாயமலையைத் தூக்கும் காட்சி ஓவியமாக வரையப்பட்டுள்ளது. கயிலாய மலையில் அம்மையும் அப்பனும் அமர்ந்திருக்கின்றனர். இராவணன் மலையை அசைத்ததால் பார்வதி அச்சம் கொண்டு நடுங்குகிறாள். சிவபெருமானின் கழுத்திலுள்ள பாம்பு கீழே வீழ்ந்து விடுகிறது, இவைகளைக் கண்ணுற்ற இறைவன் தன் கால் பெருவிரலால் மலையை அழுத்துகிறார். மலையின் அழுத்தத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத இராவணன் வாய்விட்டு அலறுகிறான். இக்காட்சி எழில் வண்ணத்தில் தீட்டப்பட்டிருப்பது அனைவரது உள்ளத்தையும் கவர்கிறது.

## வாமதேவ வடிவம்

இவைகளைப் பார்த்துவிட்டு மேலும் கிழக்கில் வந்தால் ஒரு தேவியின் சிற்பம் அமர்ந்த நிலையில் காணப்படும். இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்த

நிலை. வலக்கையில் அக்கமாலையும் இடக்கையில் தாமரை மொட்டும் காணப்படுகிறது. காதுகளில் மகர குண்டலங்கள், மார்பில் கச்சை, தேவியைச் சுற்றிப் பிரபை காணப்படுகிறது. இவ்வுருவத்தைச் சிவபெருமானின் வாமதேவ வடிவம் என்று கூறுகின்றனர்.

## உபபீடம்

சோழர்கால ஓவியக் கலைத் திறனைப் பார்த்தோம் என்ற மகிழ்ச்சியில் திரும்பவும் அதே படிக்கட்டுக்களின் வழியாகக் கீழே இறங்கி வந்து தலையை மேலே உயர்த்திப் பார்த்தால் உபபீடம் முதல் தூபி வரை உள்ள விமானப் பகுதிகளைக் காணலாம். நூறு அடி சதுரத்தில் உபபீடம் அமைந்துள்ளது. இதன் உயரம் ஆறு அடியாகும். ‘பத்ராப்’ எனப்படும் வெளி நீண்ட பகுதி ஐந்தும் ‘சப்பந்தராலப்’ எனப்படும் உள்ளடங்கிய பகுதிகள் நான்கும் கொண்டு விளங்குகின்றன.

## பீடம்

இவ்வுபபீடத்தின் மேலுள்ள பீடப்பகுதி எட்டு அடி மூன்று அங்குலம் உயரமுடையதாகக் காணப்படுகிறது. இது தொண்ணூறு அடி ஒன்பது அங்குல சதுர அமைப்பைக் கொண்டிருக்கிறது. இப்பீடம் பத்மபந்த அதிட்டான வகையைச் சார்ந்ததாகும். இது பத்ம உபானம், ஜகதி, விருத்த குமுதம், கண்டம் (கழுத்து) ஆகிய பகுதிகளைக் கொண்டதாகத் தோற்றமளிக்கிறது. இப்பீடத்தின் மேல்பகுதி யாளி உருவங்களால் அணி செய்யப்பட்டுள்ளது. யாளிவரியின் மேலே கூரைப்பகுதி காணப்படுகிறது. இக்கூரை தூண்களால் தாங்கப்படுவது போன்று காட்டப்பட்டுள்ளது.

## கோமுகம்

வடபுறம் பீடத்தின் யாளிவரியில், பெருவுடையாருக்கு நீராட்டப்பெறும் நீர் வெளியே செல்லத்தக்க வகையில் கோமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோமுகத்தை ஒரு பூதகணம் தாங்கி நிற்பது போன்று தோற்றமளிக்கிறது.

### சுவர்

இக்கோயிலில் உண்ணாழிச் சுவருக்கு புறத்தே உள்ள பிரகாரத்தின் சுவரைத்தான் சுவர் என்று அழைத்தல் வேண்டும். ஆனால் பீடத்தின் மேற் பகுதியைச் சுவர் என்று அழைப்பர். உண்ணாழிச் சுவருக்கும், உட்பிரகாரத்தின் சுவருக்கும் இடையில் உள்ள வழியாகத்தான் உண்ணாழியைச் சுற்றி வலம் வர முடிகிறது. இவ்விரு சுவர்களும் ஒரு குறிப்பிட்ட அளவு உயரம் சென்று அங்கு ஒன்று சேர்கின்றன. அவ்வாறு இரு சுவர்கள் சென்று சேர்வதால் பதின்மூன்று தளம் உள்ள பெரும் விமானத்தைத் தாங்க முடிகிறது.

### கூரை

சுவர்ப் பகுதிக்கும் மேலே காணப்படும் கூரைப் பகுதி (பிரஸ்தரம்) உத்தரம், பலபி, வஜனா, கபோதம், யாளிவரி ஆகியவைகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. சுவர்ப் பகுதியும், கூரைப் பகுதியும் சேர்ந்து இருபத்தைந்து அடி உயரம் உள்ளன. சுவர்ப் பகுதி மேலே தொடர்ந்து சிறிது உள்ளடங்கி இரண்டாம் தளத்துக்குச் செல்கிறது. இரண்டாம் தளம் ஆதிதளத்தின் அளவில் ஆறில் ஐந்து பகுதியாகக் குறைந்து காணப்படுகிறது. இரண்டாம் தளத்தின் கூரைப் பகுதி கர்ணகூடுகளையும் பத்ரசாலைகளையும் கொண்டு விளங்குகிறது. கர்ணகூட்டுக்கும் பத்ரசாலைக்கும் இடையில் பஞ்சரம் காணப்படுகிறது.

## இரண்டாம் தளம்

இரண்டாம் தளமும் ஆதிதளத்தைப் போன்றே உட்பிரகாரத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் இங்கு மூன்று பெரிய மாடங்கள் இல்லை. அதற்குப் பதிலாக உண்ணாழிச் சுவரில் இரண்டு அடிக்கு இரண்டு அடி சதுரத்தில் புடைப்புச் சிற்பங்களைக் காணமுடிகிறது. இச்சிற்பங்கள் கிழக்குப்பக்க வாயிலின் தென் பக்கத்திலிருந்து தொடங்கி அதே வாயிலின் வடக்குப் பக்கத்தில் முடிவடைகிறது. இவை சிவபெருமானே ஆடற் கலையின் 108 வகைத் தாண்டவங்களையும் ஆடிக் காட்டுவதாகச் செதுக்கப்பட்டுள்ளன. அதனால்தானோ என்னவோ இங்குள்ள கல்வெட்டுக்கள் நடராசரை, 'ஆடவல்லான்' என்று போற்றிப் புகழ்கின்றனபோலும்! இங்குள்ள சிற்பங்களில் 81 சிற்பங்கள்தான் முழுமையாகச் செதுக்கப்பெற்றுள்ளன. மற்றவை பூர்த்தி அடையாமல் உள்ளன. இத்தளத்தில் உண்ணாழியின் உள்ளே செல்லலாம், நாயக்கர் காலத்தில் உண்ணாழியின் முதல் தள உட்பகுதியில் மரங்கள் பாவப் பெற்றதால் இரண்டாம் தள உண்ணாழியின் நுழைவாயில் வழியாக உள்ளே சென்று நிற்க முடிகிறது. இவ்விடத்தில் நின்று அண்ணாந்து பார்த்தால் முழு விமானத்தின் உட்பகுதியையும் காணமுடியும். விமானத்தின் உட்பகுதியைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் சோழர் காலக் கட்டடக் கலைஞர்களின் அளப்பரிய ஆற்றலை எண்ணி வியக்காமலிருக்க முடியாது.

## மூன்றாம் தளம் முதல் கழுத்து முடிய

மூன்றாம் தளத்திலிருந்து விமானம் சிறிது சிறிதாகக் குறுகி மேலே செல்கிறது. மொத்தம் பதின்மூன்று தளங்களைக்

கொண்டதாக இவ்விமானம் காட்சி தருகிறது. இத்தகைய விமானங்களுக்கு ஜாதி விமானம் என்று பெயர். விமானத்தின் மேல் பகுதியில் எண்பட்டை வடிவில் கிரீவம் (கழுத்து) காணப்படுகிறது. கிரீவத்தின் நான்கு மூலைகளிலும் காளை படுத்த நிலையில் உள்ளன. கிரீவத்துக்கு மேலே எண்பட்டைச் சிகரம் (திராவிட பாணி) வைக்கப்பட்டுள்ளது. கிரீவத்தின் நான்கு முக்கிய திசைகளிலும் மகாநாசி அலங்காரம் காணப்பெறுகிறது. இவற்றில் கிழக்குத் திசையில் சிவன், தெற்குத் திசையில் ஆலமர்ச்செல்வன், மேற்குத் திசையில் திருமால், வடக்குத் திசையில் பிரம்மா ஆகியோர் அணி செய்கின்றனர்.

### தூபி

சிகரத்துக்கு மேல் 12 அடி உயரமுள்ள தூபி வைக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்துத் தூபி செம்பால் செய்யப்பெற்று பொன் முலாம் பூசப்பட்டது. ஆனால் தற்போதுள்ள தூபி செம்பால் மட்டும் செய்யப்பெற்றது. இதைப் பிற்கால மராத்திய அரசர் புதுப்பித்துள்ளார். இதற்குச் சான்றாக அதன் மீது கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது.

உபபீடத்திலிருந்து தூபி வரையுள்ள விமானத்தின் மொத்த உயரம் 216 அடியாகும். உபபீடத்தையும் தூபியையும் நீக்கிப் பார்த்தால் மொத்தம் 198 அடியாகும். இது உண்ணாழியின் அகலத்தைப் போல் எட்டு மடங்காகும்.

### சிற்பங்கள்

இடைக்கழியின் தெற்குப் பக்க வாயில் வழியாக இறங்கிக் கோயிலை வலம் வருவோமாயின் ஆதி தளத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் விட்ணு அனுக்ரக மூர்த்தியைக் காணலாம்.

***தெற்குப் பக்கச் சுவர்:***

| | |
|---|---|
| பிட்சாடனர் | வீரபத்திரர் |
| துவாரபாலகர் | துவாரபாலகர் |
| காலாந்தகர் | ஆனந்ததாண்டவமூர்த்தி |

***மேற்குப் பக்கச் சுவர்:***

| | |
|---|---|
| அரியரன் | அடிமுடிகாணா அண்ணல் |
| துவாரபாலகர் | துவாரபாலகர் |
| சந்திரசேகரர் | சந்திரசேகரர் |

***வடக்குப் பக்கச் சுவர்:***

| | |
|---|---|
| உமையொருபாகர் | கங்காதரமூர்த்தி |
| துவாரபாலகர் | துவாரபாலகர் |
| அம்மை அப்பர் | சந்திரசேகரர் |

***கிழக்குப் பக்கச் சுவர்:*** சூலபாணி (சிவன்)

## முப்புரம் எரித்த முதல்வர்

இரண்டாம் தளத்தில் உள்ள மாடங்கள் அனைத்திலும் நின்ற நிலையில் காணப்பெறும் முப்புரம் எரித்த முதல்வன் உருவத்தைத்தான் காணமுடிகிறது. முப்புரமெரித்த முதல்வனின் உருவம் ஏன் இக்கோயிலில் மட்டும் அதிக அளவில் காணப்படுகின்றது என்பதற்குக் கீழ்வருமாறு விளக்கம் தருகின்றனர். சிவபெருமான் எவ்வாறு மூன்று அசுரர்களின் கோட்டைகளை அழித்தாரோ அதே போன்று இராசராசனும் சேரமண்டலம், பாண்டிமண்டலம், ஈழமண்டலம் ஆகிய மூன்று நாடுகளையும் வென்று இருப்பதால், அதன் நினைவாக முப்புரமெரித்த முதல்வனை அதிக அளவில் அமைத்திருக்கிறான் என்று கூறுகின்றனர்.

### சண்டியின் ஆலயம்

உண்ணாழிக்கு வடக்குப் பக்கத்தில் சண்டிகேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இதுவும் இராசராசன் காலத்திலேயே எழுப்பப்பெற்றதாகும். இக்கோயிலில் நான்கு பக்க மாடங்களிலும் சண்டியின் சிற்பம் நின்ற நிலையில் காணப்படுகின்றன.

### கணபதி, முருகன் கோயில்கள்

உண்ணாழியின் தென்மேற்கு மூலையில் கணபதி கோயிலும் வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் கோயிலும் பிரகாரத்தில் அமைந்துள்ளன. விநாயகர் கோயில் மராட்டியர் காலத்திலும், சுப்பிரமணியர் கோயில் நாயக்கர் காலத்திலும் கட்டப்பெற்றவை. நாயக்கர் காலக் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக சுப்பிரமணியர் கோயில் விளங்குகிறது.

### அம்மன் ஆலயம்

வடகிழக்குத் திருச்சுற்றாலையில் அம்மன் ஆலயம் அமைந்திருக்கிறது. இக்கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் அமைக்கப்பட்டது என்கின்றனர். இக்கோயில் பீடப்பகுதியில் காணப்பெறும் கல்வெட்டு பிற்காலத்தைச் சார்ந்ததாக உள்ளது. இவ்வாலயத்து மகாமண்டப விதானத்தில் தேவி மகாத்மியம், நாயக்கர் கால ஓவியத்தில் தீட்டப்பட்டிருப்பது பார்த்துப் பரவசமடையத் தக்கதாகும். அம்மன் கோயில் எதிரில் வழக்கமாகக் காணப்பெறும் சிம்மத்துக்குப் பதிலாக நந்தி காணப்படுகிறது. தெற்குப் பக்கத் திருச்சுற்றாலையில் தாய்மார் எழுவரில் ஒருவரான வாராகிக்குச் சிறு கோயில் காணப்படுகிறது.

## கல்வெட்டு

இக்கோயில் பீடப்பகுதியிலும் திருச்சுற்றாலைத் தூண்களிலும், திருவாசல் சுவர்களிலும் கல்வெட்டுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இக்கோயிலை, 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி' என்று இராசராசன் தன் கல்வெட்டில் பொறித்திருப்பது இங்கு காண முடிகிறது. 'நாம் குடுத்தனவும், நம் அக்கன் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் 'கல்லில் வெட்டுக' என்று மன்னன் ஆணையிட்டிருப்பதையும் கல்வெட்டில் காண முடிகிறது. இக்கோயிற் பணி எந்த ஆண்டு துவங்கப் பெற்றது என்பதும் எந்த ஆண்டு முடிக்கப் பெற்றது என்பதும் இங்குள்ள கல்வெட்டாலேயே அறிய முடிகிறது.

## ஆயிரமாவது முடிசூட்டு விழா

இத்தகு அரிய கலைப் படைப்புகள் நிறைந்த ஒரு கோயிலைத் தன் வாழ்நாளில் எடுப்பித்த சோழ மன்னன் உலகத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த மன்னர்களோடு ஒப்பிடத் தக்கவன் அல்லவா? இராசராசன் அரசர்க்கெல்லாம் அரசன் என்று போற்றப்படுவது நியாயம்தானே! அம்மன்னனின் ஆயிரமாவது முடிசூட்டு நாளை நினைவுபடுத்திப் பெருவிழா கொண்டாட வேண்டியது நம் கடமையல்லவா?

******

# இராசராசன் இராசராசேச்சுரத்தை எடுப்பித்ததற்குச் சான்று

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ: திருமகள் போலப் பெருநிலச் செல்வி யுந் தனக்கே யுரிமை பூ
2. ண்டமை மநக் கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்ப பாடியுங் குடமலை நாடுங் கொல்ல
3. முங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரு
4. ழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசுகொள் கோராஜ கேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இ
5. ருபத்தாறாவது நாள் இருபதினால் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தஞ்சாவூர்க் கோயிலிநுள்ளால் இருமடி சோழநின் கீழைத் திரும

6. ஞ்சந சாலை தாநஞ் செய்தருளாவிருந்து பாண்டிய குலாசினி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி

7. ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார்க்கு நாம் குடுத்தநவும் அக்கன் குடுத்தநவும் நம் பெண்டுகள் குடுத்தநவும் மற்றும் குடுத்தார் குடுத்தநவும்

## (Second Section)

1. "ஸ்ரீ விமாநத்திலே கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டிநபடி.."[1]

---

1. S.S.I. Vol. II எண்: 1., இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவறையின் வடபுறச் சுவரில் உள்ளது.

# கல்வெட்டு எண்-1

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தின் தெற்குப் புறச் சுவரில் உள்ளது. தமிழ் மொழியில் உள்ள இக்கல்வெட்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1014.

**கூற்று:** ராஜராஜீச்வரம் உடைய பரமசுவாமிக்கு ஆபரணங்களுக்காக உடையார் ராஜராஜதேவர் தாம் சேரர்களையும், பாண்டியர்களையும் வென்று அவர்கள் கருவூலங்களிலிருந்து கொண்டு வந்த ரத்நங்களையும், பொன்னையும் சேர்த்துப் புனைந்த நகைகளின் (தக்ஷிணமேருவிடங்கன் என்ற எடைக் கல்லால் நிறுத்துக் கண்ட) எடையையும், அவைகளில் மொத்தத் தங்க மதிப்பையும் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1. கண்ட நாண் (கழுத்துச் சங்கிலி) ஒன்றில் கட்டிய மாணிக்கக் கல் பதினைஞ்சு, மரகதக்கல் பதினாறு, வயிரக்கல் இருபத்தெட்டு, தைய்த்த முத்து, ஒப்புமுத்து, குறுமுத்து, பயிட்டம் ஆக முத்துக்கள் நாற்பது அனைத்தும் சேர்த்து நூற்றுஎழுபது கழஞ்சு ஏழு மஞ்சாடி எடை, அவற்றின் விலை ஐநூறு காசு.
2. கண்டநாண் ஒன்றில் கட்டிய வயிரம் 24, மாணிக்கம். 23, மரகதம் 6 ஆக அனைத்தின் எடை 121¼(?) கழஞ்சு, அவற்றின் விலை 360 காசு.

3. கண்டநாண் ஒன்றில் கட்டின வயிரம் 64, மாணிக்கம் 23, மரகதம் 4. மொத்தம் நிறை 64 கழஞ்சு 6 மஞ்சாடி. விலை 220 காசு.

4. கண்டநாண் ஒன்றின் நீலம் கோமளம் ஆகியவை கோர்க்கப்பட்டதன் எடை 51¼ கழஞ்சு. அவற்றின் விலை. . . . . காசு.

5. நடுவில் ரத்நப்பட்டிகை உடைய கண்டநாண் ஒன்றில் கட்டிய வயிரம் 66, மாணிக்கம் 43, . . . துடர் 12. ஆக எடை 64¼ கழஞ்சு. அவற்றின் விலை 252 காசு.

6. கண்டநாண் ஒன்று (மற்றப்பகுதி சிதைந்து விட்டது).

| மற்ற ஆபரணங்கள் (1) | எடை (2) | காசு (3) |
|---|---|---|
| 7. புல்லிகைக் கண்டநாண் | 120 கழஞ்சு | 301 |
| 8. ” | ----- | 101 |
| 9. ” | $83\frac{1}{8}$ கழஞ்சு | 209¼ |
| 10. பாசமாலை | --- | 100(?) |
| 11. பாசமாலை ? | 24 கழஞ்சு 6 மஞ்சாடி | 102¼ |
| 12. மாணிக்கத்தின் தாலி | ----- | 50 |
| 13. ஶ்ரீ பாஹுவலயம் | ----- | 55¼ |
| 14. ஶ்ரீ பாஹுவலயம் | 29 கழஞ்சு 7 மஞ்சாடி | ...... |
| 15. பதக்கம் | 13¾க. 1ம. | 27 |
| 16. ரத்நவளையில் | 9க. 1ம. 8மா | 20½கா 1மா |
| 17. ” | 4க. 8ம | --- |
| 18. ” | ----- | --- |
| 19. ரத்நவளையில்(?) | 14½க. 4ம | 32¾ |
| 20. ரத்நவளையில்(?) | 16½க. 2ம. | 45 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 21. ரத்நவளையில்(?) | ----- | 30 |
| 22. திருக்கைக்காறை | 9½க. 3ம. 1குன்றி | 30¼ |
| 23. ரத்நகடகம | 16½க. 1ம. 1குன்றி | --- |
| 24. ----- | ----- | --- |
| 25. பவழ கடகம் | 20க. 9ம. 3மா. | 38 |
| 26. பவழ கடகம் | 20க.¾ம. 8மா. | 41½ |
| 27. திருப்பட்டிகை நாண் | 243½க. 3ம. 3மா. | 406 |
| 28. இ. . . . .ண்டலம் | ¾க. 1 குன்றி | 2 |
| 29. முத்தின் உழுத்து | ¾க. 3ம. 1குன்றி | 20 |
| 30. முத்தின் உழுத்து | ¾க. 3ம. 1குன்றி | 20 |
| 31. மாணிக்கத்தின் உழுத்து | ----- | --- |
| 32. மாணிக்கத்தின் உழுத்து | 1¾க. 3ம. | 25 |
| 33. வயிர உழுத்து | ¾க. 7மா | --- |
| 34. சோனகச்சிடுக்கு | ¾க. 4ம. 1கு. | 4 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 35. சோனகச்சிடுக்கு | 1க. 4கா. 1மா. | --- |
| 36. ரத்ந மோதிரம் | 2¾க. 4(?) | --- |
| 37. ரத்ந மோதிரம் | ----- | --- |
| 38. ரத்ந மோதிரம் | 7ம. 1குன்றி | 1 |
| 39. ரத்ந மோதிரம் | 1க. 9ம. | 2 |
| 40. ரத்ந மோதிரம் | ½க. 4ம. | 1 |
| 41. நவரத்ந மோதிரம் | 1¾க. 2ம. 1குன்றி | --- |
| 42. நவரத்ந மோதிரம் | 2க. 6ம. | 5 |
| 43. நவரத்ந மோதிரம் | 1க. 3ம. 1குன்றி | 3 |
| 44. நவரத்ந மோதிரம் | 2க. 7ம. 1குன்றி | --- |
| 45. ----- | ----- | --- |
| 46. ----- | 181க. | 500 |
| 47. பிருட்டக் கண்டிகை | 55¾க. 3ம. 1கு. | 103 |
| 48. ஸ்ரீச்சந்தம் | 38க. 7ம. 9மா. | 40 |
| 49. வலத்திருவடி நிலை | 28¼க. | 57 |
| 50. இடத்திருவடி நிலை | 28¼க. | 57 |
| 51. வலத்திருவடிநிலை மரத்தின் மேல் பொன் போர்த்தது | 110க. | 200 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 52. இடத்திருவடிநிலை மரத்தின் மேல் பொன் போர்த்தது | 113க. | 200 |
| 53. வலத்திருவடிநிலை மரத்தின் மேல் மேற்பாகம் பொன் போர்த்தது | 140¼க. | 65 |
| 54. இடத்திருவடிநிலை மரத்தின் மேல் மேற்பாகம் பொன் போர்த்தது | 140¼க. | 65 |
| 55. ----- | ----- | --- |
| 56. ஸ்ரீபாத புஷ்பம் | 91½க. 1ம. | 200 |

****

# கல்வெட்டு எண்-2

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தின் திருச்சுற்றில் வடபுறச் சுவரில் உள்ளது. தமிழ் மொழியில் உள்ள இக்கல்வெட்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. 1014.

**கூற்று:** ராஜராஜீச்சுரம் உடையார்க்கு நிவந்தக் காரர்களை (கோயில் பணி செய்வார்)யும், தளிச்சேரிப் பெண்டுகளையும், அரசன் இராஜராஜன் நியமனம் செய்து, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ஊதியம் என்பதையும் நிர்ணயித்தான். இவர்களை நியமனம் செய்வதில் அரசன் சில விதிமுறைகளையும் வகுத்துள்ளான். அவையாவன:

(1) ஊதியம் பெற்று வரும் பணியாளர் இறந்துவிட்டாலோ அல்லது வேறு ஊருக்குச் சென்று விட்டாலோ அவர்களுக்குப் பதிலாக (தலைமாறு) அவர்களின் அடுத்த வாரிசுக்கு அந்தப் பங்கைக் கொடுத்து பணி செய்விக்க வேண்டும்.

(2) அடுத்த வாரிசாகத் தகுந்தவர் (கடவார்) நேர்மையானவராக இல்லாதுவிடில் நேர்மையாக இருப்பாரை அமர்த்தி பணியைச் செய்விக்க வேண்டும்.

(3) வாரிசாக யாரும் இல்லாதுவிடில் அந்தந்தப் பணியாளர் குழுக்கள் (நியாயங்கள்) நேர்மையாக இருப்பார் எவரையேனும் பணி செய்ய நியமித்து காணி பெற வகை செய்ய வேண்டும்.

**கல்வெட்டு :**

ராஜராஜீச்சுரம் உடையார் கோயில் தளிச்சேரியில் வாழும் தளிச்சேரிப் பெண்டுகள் எந்தெந்த ஊரிலிருந்து வருவிக்கப் பெற்றனர் என்பதைத் தெரிவிக்கிறது. முதலில் தெற்குத் தளிச்சேரியில் தென் சிறகில் (தெற்குப் பக்கத்தில்) உள்ள வீடுகளில் குடியேற்றப்பட்ட பெண்டுகள் எங்கிருந்து வரவழைக்கப் பெற்றனர் என்பதைக் கூறுகிறது. அவரவர்க்கு என்ன பங்கு என்பதையும் தெரிவிக்கிறது.

**தலை வீடு :** திருவையாற்றிலுள்ள ஒலோக மஹாதேவி ஈச்சுரத்தைச் சேர்ந்த நக்கன் சேர மங்கை என்பவள். அவருக்கு பங்கு ஒன்று.

**இரண்டாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் இரணமுக ராமி. பங்கு ஒன்று.

**மூன்றாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் உதாரம். பங்கு ஒன்று.

**நான்காம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் பட்டாளி. பங்கு ஒன்று.

**ஐந்தாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் எடுத்தபாதம். பங்கு ஒன்று.

**ஆறாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் சோழ குல சுந்தரி. பங்கு ஒன்று.

**ஏழாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் ஏகவீரி. பங்கு ஒன்று.

**எட்டாம் வீடு :** நாகப்பட்டணத்துத் திருக்காரோணத்து நக்கன் இராசகேசரி. பங்கு ஒன்று.

**ஒன்பதாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் தேசி. பங்கு ஒன்று.

**பத்தாம் வீடு :** அதே கோயில் நக்கன் பெரியதேசி. (இவள் ஒன்பதாம் வீட்டில் வசிப்பவளின் அக்காளாக இருக்கலாம்). பங்கு ஒன்று.

**பதினொன்றாம் வீடு :** அதே கோயில் நக்கன் விச்சாதிரி. பங்கு ஒன்று.

**பன்னிரண்டாம் வீடு :** அதே கோயில் நக்கன் மறைக்காடு. (சிலர் சில முக்கியத் தலங்களின் பெயர்களை அப்படியே தங்களுக்குப் பெயராகச் சூட்டிக் கொண்டிருந்திருக்கின்றனர் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. ஏனெனில் மறைக்காடு என்பது இப்பொழுது உள்ள வேதாரண்யம் என்ற ஊராகும்). பங்கு ஒன்று.

**பதின்மூன்றாம் வீடு :** அதே ஊரின் நடுவில் இருக்கும் கோயிலைச் சேர்ந்த நக்கன் அம்மாறி. பங்கு ஒன்று.

**பதினான்காம் வீடு :** இராசகேசரிநல்லூரைச் சேர்ந்த நக்கன் திருவையாறு. பங்கு ஒன்று.

**பதினைஞ்சாம் வீடு :** ஜநநாதபுரம் விக்ரமவிஜய ஈச்வரம் என்ற கோயிலைச் சேர்ந்த நக்கன் தில்லை அழகி. பங்கு ஒன்று.

**பதினாறாம் வீடு :** அதே கோயிலைச் சேர்ந்த நக்கன் எச்சுமண்டை. பங்கு ஒன்று.

**பதினேழாம் வீடு :** அந்த ஊரைச் (ஜநநாதபுரம்) சேர்ந்து உள்ள பகவதிசேரியில் வாழ்ந்த நக்கன் பரமி. பங்கு ஒன்று.

**பதினெட்டாம் வீடு :** திருவிடைமருதிலைச் சேர்ந்த நக்கன் தில்லைக்கரைசு. பங்கு ஒன்று.

**பத்தொன்பதாம் வீடு :** அதே ஊரைச் சேர்ந்த நக்கன் அழகி. பங்கு ஒன்று.

**இருபதாம் வீடு :** அதே ஊர் நக்கன் சதுரி. பங்கு ஒன்று. இருபத்தொன்றாம் வீடு, இருபத்திரண்டாம் வீடு, இருபத்து மூன்றாம் வீடு ஆகியவற்றில் திருவிடைமருதிலைச் சேர்ந்த தளிச்சேரிப் பெண்டுகளே குடியிருக்கிறார்கள். இவ்வாறு பழையாறு, அரபுரம், தஞ்சாவூர், திருவாரூர், மட்டை, சீகண்டபுரம், பராந்தகபுரம், நியமம், அம்பர், கடம்பூர், திருமறைக்காடு, விடையபுரம், வேரூர், நயத்ரபுரம், வீரபுரம், பாச்சில் வீரபுரம், திருக்கொள்ளம்பூதூர், கற்பகதாவிபுரம், தளிச்சாத்தங்குடி, பல்லவநாரணபுரம் ஆகிய ஊர்களிலிருந்து மேலும் பலர் வந்து மொத்தம் தொண்ணூற்றிருவர் அத்தெருவில் தெற்குப் பக்கத்தில் குடியேறியிருந்திருக்கிறார்கள். இதைப் போன்ற தெற்குத் தளிச்சேரி வடக்குப் பக்கத்தில் பல ஊர்களிலிருந்தும் வந்து தொண்ணூற்றிருவர் குடியேறியிருக்கிறார்கள். வடக்குத் தளிச்சேரியில் தெற்குப் பக்கத்தில் தொண்ணூற்றை வரும், வடக்குப் பக்கத்தில் தொண்ணூற்றறுவரும் குடியேறினர். மேலும் இருபத்தைந்து பேர் வந்து குடியேறியிருக்கிறார்கள் என்று கூறும் கல்வெட்டுப் பகுதி உள்ளது. அவர்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தார்கள் என்று கூறும் கல்வெட்டுப் பகுதி சிதைந்திருக்கிறது.

# நிவந்தக்காறர்

## 1. நட்டவம்

நாட்டியம் கற்றுத் தருவதற்காக அரையன் சுந்தர சோழன் என்னும் மும்முடி சோழநிருத்த மார்ராயன், குமரன் வடவாயிலான மும்முடி சோழநிருத்தப் பேரையன், விக்கி பட்டாலகன், அரையர் அபிமான தொங்கனான அருமொழி நிருத்தப் பேரையன், மல்லன் இரட்டையன், சித்திரன் கேசுவன், அரையன் மணஞ்சரியான வகையிலி நிருத்தப் பேரையன் ஆகியவர்கள் அமர்த்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் இரண்டு பங்குகள் அளிக்கப் பெற்றன. இதில் மல்லன் இரட்டையனும், சித்திரன் கேசவனும் ஒவ்வொரு பங்குதான் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இளையவர்களாக (அனுபவம் அதிகம் இல்லாதவர்களாக) இருந்திருக்கலாம்.

நாட்டியம் கற்றுத் தருபவர்கள் தளிச்சேரிப் பெண்டுகளைவிட ஒரு பங்கு அதிகமாகப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இதற்காக அமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் நாட்டியத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் என்று தெரிகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் 'நிருத்தப் பேரயன்' என்று அழைக்கப்படுகின்றனர். நிருத்தப் பேரயன் என்றால் நாட்டியத் தலைவன் என்று பொருள்.

## 2. *பாட்டு(?)*

கல் சிதைந்திருப்பதால் என்ன பணி என்று சரியாகத் தெரியவில்லை. இதற்கு குராவன் வீர சோழனான பஞ்சவன்

மாதேவி நாடகமய்யன், மறைக் காட்டுக் கணவதியான திருவெள்ளறைச் சாக்கை (மறைக் காடு அவனது பிறந்த ஊராகவும் கணவதி என்பது பெற்றோர் இட்ட பெயராகவும் இருக்கலாம்). சிங்கன், இளங்காவன் ஆகியோர் அமர்த்தப் பெற்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பங்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

### 3. மே....வியம்

சிதைந்த இப்பெயர் ஏதோ ஒரு இசைக் கருவியைக் குறிப்பதாகத் தெரிகிறது. இப்பணிக்கு ஒருவருக்கு பங்கு இரண்டாக இருவருக்கு நான்கு பங்கு கொடுக்கப்பட்டது.

### 4. கானபாடி (பாடுபவர்)

கானபாடி ஐவர்க்கு ஒவ்வொருவருக்குப் பங்கு ஒன்றரை என்ற விகிதத்தில் பங்கு ஏழரை அளிக்கப்பட்டுள்ளது.

### 5. வங்கியம்

வங்கியம் என்ற இசைக்கருவி வாசிப்பதற்காக மூவரை நியமித்து ஒவ்வொருவருக்கும் ஒன்றரைப்பங்கு என்ற விகிதத்தில் பங்கு நான்கரை வழங்கப்பட்டுள்ளது. வங்கியம் வாசிப்பதற்காக அமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் படையில் பணியாற்றியவர்களாகத் தெரிகிறது. முதலில் கூறப்படுபவன் குதிரைப்படையில் பணி புரிந்தவன். இரண்டாமவன் வடுகக்காவலர்களுள் ஒருவனாக இருந்திருக்கிறான்.

### 6. பாடவியம்

பாடவியம் என்ற கருவி வாசிப்பதற்காக நால்வர் நியமிக்கப்பட்டிருந்தனர். நால்வரில் மூவர் 'வாத்ய மாராயர்'

என்ற பட்டம் பூண்டவர்கள். வாத்யம் மீட்டுவதில் அவர்கள் நல்ல திறமைசாலிகள் போன்று தெரிகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு இரண்டு என்ற அடிப்படையில் எட்டு பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

### 7. உடுக்கை

உடுக்கை வாசிப்பார் இருவர்க்கு பங்கு ஒன்றரை வீதம் மூன்று பங்கு.

### 8. வீணை

வீணை வாசிப்பார் இருவர்க்கு பங்கு மூன்றரை.

### 9. ஆரியம் பாடுவார்

ஆரியம் (வடமொழி சுலோகங்கள்) பாடுவார் மூவர்க்கு பங்கு நான்கரை.

### 10. தமிழ் பாடுவார்

தமிழ் பாட நால்வர்க்கு பங்கு ஒன்றரை வீதம் பங்கு ஆறு.

### 11. கொட்டி மத்தளம்

கொட்டி மத்தளம் (இது இப்பொழுது வழங்கப்படும் கெட்டி மத்தளம் என்று கருத முடியாது. கொடுகொட்டி என்ற இசைக் கருவி சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படுகிறது) வாசிக்கும் இருவர்க்குப் பங்கு ஒன்று வீதம் இரண்டு.

### 12. முத்திரைச் சங்கு

முத்திரைச் சங்கு ஊதுவார் மூவர்க்குப் பங்கு ஒன்று வீதம் மூன்று.

### 13. பக்கவாத்யர்

பக்கவாத்யர் ஐவர்க்குப் பங்கு முக்கால் வீதம் மூன்றே முக்கால்.

### 14. காந்தர்வர்

காந்தர்வர் இருபது பேருக்குப் பங்கு முக்கால் வீதம் பதினைந்து.

### 15. திருவாய்க் கேழ்வி

திருவாய்க் கேழ்வி அறுவர்க்குப் பங்கு ஒன்று வீதம் ஆறு. (திருவாய்க் கேழ்விகளில் ஐவர் 'கடிகைமாராயர்' என்ற பட்டம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்).

### 16. நாயகம் செய்வார்

தளிச்சேரி பெண்டுகளும் காந்தர்விகளும் பணியாற்றும்போது மேற்பார்வை புரிவதற்காக அமர்த்தப்பட்ட இருவர்க்கு பங்கு இரண்டு வீதம் நான்கு.

### 17. கணக்கு, கீழ்க்கணக்கு

கணக்கெழுதுவார் நால்வர்க்குப் பங்கு இரண்டு வீதம் எட்டு.

கீழ்க்கணக்கு (கணக்கு எழுதுவார்க்கு உதவி செய்பவர்கள்) நால்வர்க்குப் பங்கு ஒன்றரை வீதம் பங்கு ஆறு.

### 18. உவைச்சு

உவைச்சு அல்லது சகடை கொட்டிகள் (பறை அறைவோர்) அறுபத்தாறு பேர்க்குப் பேரால் பங்கு அரை

வீதம் முப்பத்து மூன்று (இவர்களுள் கடைசிப் பதினொருவர் 'தடிமாறும்' பணி புரிந்தவர்கள். அதாவது முன்னுள்ள ஐம்பத்தைவரில் யாரேனும் எக்காரணம் பற்றியாவது வரவில்லையென்றால் அவர்கள் தடியை வாத்தியத்தடி-மாற்றிக் கொள்பவர் எனலாம். இந்த சகடைகொட்டிகளே பாதவக்காணி பெற வேண்டும் என்றும் உள்ளது. பாதவக்காணி பரதவக்காணியாக இருக்கக் கூடுமோ(?).

## 19. திருப்பள்ளித் தொங்கல்

திருப்பள்ளித் தொங்கல் பிடிக்கும் (மாலை தொடுக்கும்) ஆள் ஒருவர்க்குப் பங்கு ஒன்று.

அவருக்குத் துணையாக ஆள் பதின்மர்க்கு ஒவ்வொருவர்க்கும் பங்கு அரையாகப் பங்கு ஐந்து.

## 20. விளக்குப் பிடிப்பார்

விளக்குப் பிடிப்பார் பங்கு ஒன்றும், துணையாள் எழுவர்க்குப் பங்கு அரை வீதம் மூன்றரையும் ஆக மொத்தம் பங்கு நான்கரை.

## 21. நீர்த்தெளிப்பார்

நீர்த்தெளிப்போர் நால்வர்க்குப் பங்கு அரை வீதம் பங்கு இரண்டு.

## 22. சன்னாலி

சன்னாலியள் (பாத்திரம் தூய்மை செய்பவன்) இருவர்க்குப் பங்கு முக்கால் வீதம் பங்கு ஒன்றரை.

### 23. குசவர்

குசவர் தலையாள் ஒன்றுக்குப் பங்கு ஒன்றும் துணையாள் பதின்மர்க்குப் பங்கு அரை வீதம் பங்கு ஐந்தும் ஆக பங்கு ஆறு.

### 24. வண்ணார்

வண்ணத்தார் இருவர்க்குப் பேரால் பங்கு ஒன்றாக பங்கு இரண்டு. (வண்ணத்தார் ஈரங்கொள்ளிகள் என்று குறிக்கப்படுகின்றனர். நிகண்டுகளில் 'ஈரங்கொல்லி' என்றுதான் காணப்படுகிறது.)

### 25. காவிதிமை

காவிதிகள் இருவர்க்குப் பங்கு அரை வீதம் பங்கு ஒன்று.

### 26. நாவிசர்

நாவிசம் செய்ய (முடி வெட்ட) இருவர்க்குப் பேரால் அரை ஆகப் பங்கு ஒன்று.

### 27. திருக்கள்

காலம் பார்த்துக் கணிக்கும் கணி இருவருக்கும் பங்கு இரண்டும், துணை ஆள் நால்வர்க்குப் பேரால் அரை ஆகப் பங்கு இரண்டும் ஆக பங்கு நாலு.

### 28. கோலினமை

கோலினமை செய்வார் இருவர்க்குப் பேரால் பங்கு ஒன்றரை வீதம் பங்கு மூன்று.

### 29. அம்பட்டன்

அம்பட்டன் ஒருவருக்குப் பங்கு ஒன்று.

### 30. தையல்காரர்

தய்யார் (தையல்காரர்கள்) இருவர்க்குப் பங்கு ஒன்று வீதம் பங்கு இரண்டு.

### 31. ரத்நத்தய்யான்

ரத்னம் தைப்பவர் (கோர்ப்பவராக இருக்கலாம்) ஒருவர்க்குப் பங்கு ஒன்றரை.

### 32. கன்னாள்

கன்னாள் ஒருவனுக்குப் பங்கு ஒன்று.

### 33. தச்சர்

தச்சு மேற்பார்வை புரிவார் ஒருவர்க்குப் பங்கு ஆள் நால்வர்க்குப் பங்கு முக்கால் வீதம் பங்கு மூன்று.

### 34. பாணர் (யாழ் அல்லது வீணை வாசிப்பவர்)

பாணர் நால்வர்க்குப் பங்கு ஒன்றரை வீதம் பங்கு ஆறு.

### 35. தட்டான்

கண்காணித் தட்டான் ஒருவனுக்குப் பங்கு ஒன்று.

நிவந்தகாறர்களில் காவிதிமை செய்பவர், கோலினமை செய்பவர் ஆகியோர் செய்த பணிகள் என்ன என்று சரியாகத் தெரியவில்லை.

# விளக்கக் குறிப்புகள்

## 1. நிவந்தக்காரர்

கோயிலில் சில குறிப்பிட்ட பணிகளைச் செய்ய நியமிக்கப்படுவோர். நிவந்தம் என்பது நிபந்தம் என்ற சமஸ்கிருதச் சொல்லின் மரூஉ. இதன் பொருள் பந்திக்கப்படுவது அதாவது கட்டப்படுவது. இந்தயிந்தப் பூஜைப் பணிகளைச் செய்விக்க வேண்டும் என்று பந்திப்போடு கோயிலுக்குக் கொடுக்கப்படும் அறக்கொடை நிவந்தம் எனப்படும். இந்நிவந்தத்தைச் செயலாக்கும் கோயில் பணியாளர் நிவந்தக்காரர் ஆவர். (பழைய கல்வெட்டுகளிலெல்லாம் 'காறன்' என்ற சொல்லில் பெரும்பாலும் வல்லின 'ற' கரம்தான் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.)

## 2. தளிச்சேரிப் பெண்டுகள்

கோயிலுக்குச் சேர்ந்த தெருக்களில் வாழும் கோயிற்பணிப் பெண்கள். 'தளி' என்றால் கோயில். 'சேரி' என்றால் தெரு என்பதுதான் இங்கு பொருத்தமாகப்படுகிறது. சோழ மண்டலத்திலிருந்த பல கோயில்களைச் சேர்ந்த பெண்கள் தஞ்சாவூர்க் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். யாவருடைய பெயர்களும் நக்கன் என்ற சொல்லோடு தொடங்குகிறது. நக்கன் என்பது சிவனுக்கு ஒரு பெயர். சிவன் கோயிலைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் இப்பெண்கள் 'நக்கன்' என்ற முன்னொட்டை பெற்றிருக்கலாம். ஆனால் விஷ்ணு கோயிலைச் சேர்ந்தவர்களாகக் குறிக்கப்படுபவரும் இப்பெயரைக் கொண்டுள்ளார்கள். ஆகவே

ஹியூல்ட்ஜ் கருதினபடி நக்ந என்ற சமஸ்கிருதச் சொல்லின் மரூஉவான நக்கன் என்ற இச்சொல் பெண்ணை, குறிப்பாகக் கோயில் பணிப்பெண்களைக் குறிக்கப் பயன்படுத்தியிருக்கலாம்.

## 3. பங்குவழி ஒன்றினால் நிலன் வேலி

ஒவ்வொரு கோயில் பணியாளுக்கும், தளிச்சேரிப் பெண்ணுக்கும் அவரவர் தரத்துக்குத் தக்கபடி வாழ்க்கைச் செலவு கொடுக்கப்பட்டது. சிலருக்கு ஒரு பங்கும், சிலருக்கு இரண்டு பங்கும், சிலருக்கு முக்கால் பங்கும் கொடுக்கப்பட்டது. ஒரு பங்கு 100 கலம் நெல்லை வழங்கக்கூடிய ஒரு வேலி நிலம் என்பதாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நூறு கலம் ஒரு வேலி நிலத்தின் முழு விளைச்சல் அல்ல. ஒரு வேலி நிலத்திலிருந்து அரசுக்கு வந்த வருவாய் ஆகும். (இதைப்பற்றி கல்வெட்டு எண் 1-ன் கீழ் பார்க்கவும்.

## 4. நியாயங்கள்

கோயில் பணியாட்களுக்குப் பங்குகளை வழங்கிய பொழுது செய்யப்பட்ட விதிகளில் ஒன்று. நியமிக்கப்பட்ட பணியாட்கள் வாரிசு இல்லாமல் இறந்து விட்டால் இறந்தவர்களின் பங்குகளை மூன்றாமவர்க்கு வழங்குவது எப்படி எனக் குறிக்கிறது. அதாவது அந்தப் பணியாட்களோடு சேர்ந்து பணியாற்றும் மற்ற உடன் பணியாட்கள் கூடித் தகுதியான வேறு ஒருவரை அவர்களைச் சார்ந்துள்ளோரிடமிருந்தே பொறுக்கியெடுத்து இறந்து போனவர்களுக்கு மாற்றாக இட்டுக்கொள்ளலாம் என்று விதிக்கப்பட்டது. ஆகவே நியாயம் என்பது ஒரு பணியாளர் தொகுதி எனல் பொருந்தும்.

## 5. கடிகைமாராயர்

திருவாய்க்கேழ்வி என்ற பணியைப் புரிந்தவர்களில் ஐவர் 'கடிகைமாராயர்' என்ற பட்டம் பூண்டுள்ளார்கள். 'கடிகை' என்பது சமஸ்கிருதக் கல்லூரிக்குப் பெயர். ஆனால் இந்த இடத்தில் விழா முதலியன செய்ய நல்ல நேரத்தைக் கணித்தறியும் பொறுப்பு பற்றி இப்பட்டம் பெற்றார் என்பதுதான் பொருந்தும். இக்கோயிலிலேயே இன்னொரு கல்வெட்டு (தெ.இ.க.உ 25) இதைத் தெளிவுபடுத்துகிறது. அக்கல்வெட்டில் 'ராஜராஜீச்சுரமுடையார் ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குத் திருக்கொடியேற்று நான்று திருப்பறையறைவு கேட்பிக்கும் கடிகையார்' என்ற குறிப்பு வருகிறது.

## 6. படை

இந்தக் கல்வெட்டில் குறிக்கப்படும் நிவந்தக்காறர் பலர் சில குழாங்களைச் சேர்ந்தவர்கள் என்று குறிக்கப்படுகிறார்கள். 1. அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காறர். 2. ஓத்திரியசிகாமணித் தெரிந்த வலங்கை வேளைக்காறர். 3. சத்துரு புஜங்க தெ. வ. வே. 4. ராஜகண்டியவ தெ. வ. வே. 5. ராஜராஜ தெ. வ. வே. 6. அரிதுர்க்கலங்கன தெ. வ. வே. 7. மூர்த்த விக்கிரமாபரண தெ. வ. வே. 8. இரணமுகபீம தெ. வ. வே. 9. வீரசோழ அணுக்கர். 10. பராந்தகக் கொங்கவாள். 11. மும்முடி சோழத் தெரிந்த ஆனைப்பாகர். 12. மும்முடி சோழத் தெரிந்த பரிக்காறர். 13. நிகரிலிசோழத் தெரிந்த உடநிலை குதிரைச் சேவகர். 14. சிறுதனத்து வடுகக் காவலர்.

இந்தக் குழாங்கள் யாவுமே படைப் பிரிவுகளாகும். படைப் பிரிவுகள்தாம் இவை என்பது "மூர்த்த விக்ரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் மங்கலவன் மாணிக்குப்

பங்கு முக்காலும் இப்படைத் தண்டன் கம்பனுக்குப் பங்கு முக்காலும்" என்ற பகுதியிலிருந்து தெளிவாகிறது. ஆனால் வீரசோழ அணுக்கர், கோயில் மெய்காப்பாளர் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இக்குழாங்களின் பெயர்களின் முதற்பகுதி (அதாவது அழகிய சோழ, ஒத்திரிய சிகாமணி முதலியவை) அரசர்கள், குறிப்பாக ராஜராஜனின் விருதுப் பெயர்களாகும். தெரிந்த வேளைக்காறர் என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளைக்காறர் என்று பொருள். அதே போல ஆனைப்பாகரும், பரிக்காறரும் (குதிரை வீரர்) உடநிலை குதிரைச் சேவகரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பராந்தகக் கொங்கவாள் - ஒருவகையான வாளில் (கொங்கவாள்) பயிற்சி பெற்றவர்களாக இருக்கலாம். சிறுதனத்து வடுகக் காவலர் வடுகரைக் கொண்டு அமைக்கப்பட்ட படையாகும்.

******

# கல்வெட்டு எண்-3

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தின் தெற்குப் பக்கச் சுவரில் உள்ளது. தமிழ் மொழியில் உள்ள இக்கல்வெட்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. 1014.

**கூற்று:** ஸ்ரீராஜராஜன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குச் சோழ மண்டலத்திலும், பாண்டி நாடான இராஜராஜ மண்டலத்திலும், தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழ மண்டலத்திலும் உள்ள பிரமதேயங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களது ஊரில் நிலம், உறவினர், பொருள் உடையாராய் இருப்பாரைப் பார்த்து ஸ்ரீபண்டாரஞ் செய்வதற்குப் (கருவூல அலுவல் செய்ய) பிராமணர்களையும், திருப்பரிசாரகம் செய்வதற்கு மாணிகளையும் (மணமாகாதவன்), கணக்கு எழுதுவதற்காகக் கரணத்தார்களையும் சந்திர சூரியர் உள்ளவரை (அதாவது நிலையாக) நியமிக்க அனுப்பி வைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததைக் கூறுகிறது.

***ஊதியம் :*** பண்டாரி (பண்டாரஞ் செய்வார் ஒருவர்க்கு) ஒரு ஆண்டுக்கு நெல் இருநூறு கலம் திருப்பரிசாரகஞ் செய்யும் மாணி ஒருவனுக்கு ஒவ்வொரு நாளும் நெல் பதக்கும் (இரு மரக்கால்) (ஆண்டு ஒன்றுக்கு 60 கலமாகும்), ஓர் ஆண்டுக்குக் காசு நான்கும்

திருப்பரிசாரகம் செய்வார்களிலே தீட்சை பெற்ற நிலைப் பணியாளர்(?) பத்துப் பேருக்கு ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு நெல் முக்குறுணியும் அதாவது மூன்று மரக்காலும் (ஆண்டு ஒன்றுக்கு 90 கலமாகும்) ஓர் ஆண்டுக்குக் காசு நான்கும்

திருப்பரிசாரகர்களிலே நிலையாய் இருந்து மற்றொரு சிறப்புப் பணி புரிவார் (பெயர் சிதைந்து விட்டது) இருபது பேருக்கு ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும் (ஓர் ஆண்டுக்கு 60 கலம்) ஓர் ஆட்டைக்குக் காசு ஐந்தும்

கணக்கெழுதுவான் ஒருவனுக்கு ஒரு ஆண்டுக்கு நெல் இருநூறு கலம்

கணக்கெழுதுவார்க்குத் துணைபுரியும் இருவர்க்கு ஓராண்டுக்கு ஒவ்வொருவருக்கு நெல் எழுபத்தைந்து கலம் ஆக நெல் நூற்றைம்பது கலமும்

***ஊதியம் பெற வேண்டிய இடம்:*** திருப்பரிசாரகஞ் செய்யும் மாணிகள் ராஜராஜீச்வரம் உடையார் கோயிலில் உள்ளூர்ப் பண்டாரத்திலிருந்து (கருவூலத்திலிருந்து) நெல்லும் காசும் பெற்றுக்கொள்ளவேண்டும்

பண்டாரிகளும், கரணத்தார்களும் உடையார் ராஜ ராஜீச்வரம் உடையார் கோயிலின் நாட்டுப் பண்டாரத்திலிருந்து நெல் பெற்றுக் கொள்ளவேண்டும்.

எந்தெந்த நாட்டைச் சார்ந்த ஊர்களிலிருந்து பண்டாரிகள், மாணிகள், கரணத்தார்கள் எவ்வளவு பேர் அனுப்பப்பட்டனர் என்பதைக் கல்வெட்டு விரித்துக் கூறுகிறது. அவை அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

வளநாடு : அருமொழிதேவ வளநாடு

| நாடு | சபை | பண்டாரி | மாண் | கரணத்தான்/ கீழ்க்கரணத்தான் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மங்கலநாடு | மங்கலம் | 1 | 1 | ----- |
| நென்மலிநாடு | மதனமஞ்சரி சதுர்வேதி மங்கலம் | --- | 2 | ----- |
| நென்மலிநாடு | குன்றியூர் | --- | 1 | ----- |
| நென்மலிநாடு | சுரான்குடி | --- | 1 | ----- |
| நென்மலிநாடு | ஆராற்றூர் | --- | 1 | ----- |

| | | | | |
|---|---|---|---|---|
| புறங்கரம்பை நாடு | பல்லவன் மஹாதேவி சதுர்வேதி மங்கலம் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | செம்பியன் மஹாதேவி சதுர்வேதி மங்கலம் | --- | 2 | ---- |
| புறங்கரம்பை நாடு | பெரும்பல மருதூர் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | களப்பாழ் | --- | 1 | --- |
| புறங்கரம்பை நாடு | சிங்களாந்தகச் சதுர்வேதிமங்கலம் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | அருமொழி தேவச் சதுர்வேதி மங்கலம் | --- | 2 | ---- |
| புறங்கரம்பை நாடு | கெழுவத்தூர் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | --- சதுர்வேதி மங்கலம் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | கோதண்டராமச் சதுர்வேதி மங்கலம் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | வங்க நகர் | --- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | வன்கொற்றங்குடி | --- | 1(?) | ---- |
| புறங்கரம்பை நாடு | . . . . . . | -- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | பனையூர் | -- | 1 | ---- |
| புறங்கரம்பை நாடு | . . . | ---- | 1 | ---- |
| வண்டாழை வேளூர்க் கூற்றம் | குறும்ப. . . . . | ---- | 1(?) | --- |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வண்டாழை- வேளூர்க் கூற்றம் | கூழூர் | ---- | 1 | ----- |
| வண்டாழை வேளூர்க் கூற்றம் | கொண்ணூர் | ---- | 1 | ----- |
| ஆர்வலக். கூற்றம் | ஆர்வலத்து | ---- | 2 | ----- |
| ? | ? | ---- | 1 | ----- |
| ? | வலிவலத்து | ---- | 1 | ----- |
| ? | ? | ---- | 1 | ----- |
| ? | மாலிலூர் | ---- | 1 | ----- |
| ? | . . . . | ---- | 1 | ----- |
| ? | அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ----- |
| புலியூர் நாடு | ? | ---- | 1 | ----- |
| ? | ? | ---- | 2 | ----- |
| ? | இரஞ். . . . . | ---- | 1(?) | ----- |
| ? | பரமேச்வரமங்கலம் | ---- | 1 | ...... |
| ? | மங்கலம் | ---- | 2 | ----- |

**வளநாடு : க்ஷத்ரிய சிகாமணி வளநாடு**

| | | | | |
|---|---|---|---|---|
| சேற்றூர் கூற்றம் | . . . . . | ---- | 1 | ---- |
| ? | குடவாயில் | ---- | 1 | ---- |
| ? | நாலூர் | ---- | 1 | ---- |
| ? | . . . | ---- | 1 | ---- |
| தேவூர் நாடு | . . . . . | ---- | 1 | ---- |
| ? | ? | ---- | 1 | ---- |
| ? | ? | ---- | 1 | ---- |
| ? | கள்ளூராகிய சன்னமங்கலம் | ---- | 1 | ---- |
| ? | மருகல் | ---- | 1 | ---- |
| வேளா நாடு | . . . .சபையோர் | ---- | 1 | ---- |
| ? | தானதொங்கச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| முழையூர்நாடு | குந்தவைச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |

**வளநாடு : உய்யக் கொண்டான் வளநாடு**

| | | | | |
|---|---|---|---|---|
| திருநறையூர் நாடு | தண்டத்தோட்டமான மும்முடி சோழச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | 1+2 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| பாம்பூர் நாடு | திருக்குடமூக்கில் | ---- | 2 | ---- |
| அம்பர் நாடு | அம்ப புறத்தூர் | ---- | 1(?) | ---- |
| அம்பர் நாடு | அவ்வை நல்லூரும்பிரெட்டைகுடியும் | ---- | 1 | ---- |
| வெண்ணாடு | திருமழலை | ---- | 2 | ---- |
| வெண்ணாடு | கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | 1+2 |
| வெண்ணாடு | வைய்கலாகிய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| திரைமூர் நாடு | ச. . . . . | ---- | 1 | ---- |
| திருவழுந்தூர் நாடு | . . . . | ---- | 2 | ---- |
| திருவழுந்தூர் நாடு | நல்லூர் புதுக்குடி | ---- | 2 | ---- |
| திருவழுந்தூர் நாடு | வழகூர் | ---- | 2 | ---- |
| திருவழுந்தூர் நாடு | அக்களூர் | ---- | 1 | ---- |
| விளை நாடு | விளைநகராகிய நித்த வினோதச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| விளை நாடு | பெருமுளை | ---- | 1 | ---- |
| விளை நாடு | பறியலூர் | ---- | 1 | ---- |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆக்கூர் நாடு | இராஜேந்திரசிம்மச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| ஆக்கூர் நாடு | திருக்கடவூர் | ---- | 2 | ---- |
| ஆக்கூர் நாடு | தலைச்சங்காடு | ---- | 2 | ---- |
| குறும்பூர் நாடு | காயாக்குடி | ---- | 2 | ---- |
| குறும்பூர் நாடு | பராக்ரம சோழச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| குறும்பூர் நாடு | உலகு. . . . | ---- | 1 | ---- |
| குறும்பூர் நாடு | குறும்ப புறத்தூர் | ---- | 2 | ---- |
| /மு/ழையூர் | சோள. . . சிம்மச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| குறும்பூர் நாடு | திருவிடைக்கழி | ---- | - | 1+2 |

**வளநாடு : இராஜேந்திர சிம்ம வளநாடு**

| | | | | |
|---|---|---|---|---|
| பொய்கை நாடு | கண்டராதித்யச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| பொய்கை நாடு | பெரும்புலியூர் | ---- | (?) | ---- |
| மிறைக்கூற்றம் | காமரசவல்லி | ---- | 2 | 1+2 |
| அண்டாட்டுகூற்றம் | தொழூர் பராந்தகச் | ---- | (?) | ---- |
| ? | சதுர்வேதி மங்கலம் | ---- | 4 | 1+2 |

| (1) | (2) | (3) | (4) | (5) | |
|---|---|---|---|---|---|
| இந்நம்பர் நாடு | ஆதனூர் | | ---- | 1 | ---- |
| இந்நம்பர் நாடு | பழைய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் | | ---- | (?) | ---- |
| இந்நம்பர் நாடு | அசுகூர் | | ---- | 1 | ---- |
| மிழலை நாடு | . . . . | | ---- | 1 | ---- |
| மண்ணி நாடு | ஏமநல்லூராகிய திரை லோக்ய மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் | | ---- | 2 | ---- |
| மண்ணி நாடு | வேம்பற்றூராகிய அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலம் | | ---- | 2 | ---- |
| மண்ணி நாடு | இடையர் நல்லூர் | | ---- | 1 | ---- |
| மண்ணி நாடு | இடவை | | ---- | 1 | ---- |
| ? | . . . . | | ---- | 1 | ---- |
| ? | ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- | |
| நல்லாற்றூர் நாடு | கதவாய் மங்கலம் | | ---- | 1 | ---- |
| நல்லாற்றூர் நாடு | மஹேந்திர கோட்டூர் | | ---- | (?) | ---- |
| ? | . . . லமான புலியூர் | | ---- | 1 | ---- |

| | | | | |
|---|---|---|---|---|
| ? | ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் | 1 | 12 | ---- |
| குறுக்கை நாடு | குறுக்கை | ---- | 1 | ---- |
| குறுக்கை நாடு | காவிரிமங்கலம் | ---- | 1 | ---- |
| குறுக்கை நாடு | கடலன்குடி | ---- | 1 | ---- |
| திருவாலி நாடு | கா. . . . . | ---- | 1 | ---- |
| ? | . . . . க்குடி | ---- | 1 | ---- |
| ? | திருநன்றியூர் | ---- | 1 | ---- |
| ? | மாற்பிடுகுதேவி சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| வெண்ணையூர் நாடு | பெருங்கண்பூர் | ---- | 1 | ---- |
| வெண்ணையூர் நாடு | பாப்பாக்குடி | ----- | (?) | ---- |
| ? | ? | ---- | 1 | ---- |
| ? | . . .ல் வேதிமங்கலம் | ---- | 2 | ---- |
| ? | திருக்கழுமலம் | ---- | 1 | ---- |
| ? | தேனூர் | ---- | 1 | ---- |
| நாங்கூர் நாடு | நாங்கூர் | ---- | 2 | ---- |
| நாங்கூர் நாடு | குன்றம் | ---- | 1 | ---- |
| நாங்கூர் நாடு | ? | ---- | 1 | ---- |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| அதிகைமங்கை நாடு | - | ---- | 2 | ---- |
| கொண்ட நாடு | பஞ்சவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| நெலுவூர் நாடு | குமராதித்யச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| பிடவூர் நாடு | நயதீரமங்கலம் | ---- | 1 | ---- |
| ? | - | ---- | (?) | ---- |
| ? | மஹேந்திர மங்கலம் | ---- | 1 | ---- |
| ? | ஓத்திரியச்சிம்மச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| **வளநாடு : ராஜாச்ரய வளநாடு** | | | | |
| வடவழிநாடு | திருவெள்ளறை | ---- | 2 | ---- |
| கலாரக்கூற்றம் | பராக்கிரமசோழச் சதுர்வேதி மங்கலம் | ---- | - | 2 |
| ? | --- | ---- | - | ---- |
| ? | சங்கத்திச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| **வளநாடு : கேரளாந்தக வளநாடு** | | | | |
| உறையூர்க்கூற்றம் | ராஜாச்ரயச் சதுர்வேதி மங்கலம் | 1 | 2 | ---- |

| | | | | |
|---|---|---|---|---|
| உறையூர்க்கூற்றம் | அறிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம் | ---- | (?) | ---- |
| ? | தண்டலை | ---- | 1 | ---- |
| ? | - | ---- | 1 | ---- |
| தட்டைகளநாடு | கற்றளிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| சூரலூர்க் கூற்றம் | சோழ உத்தம சோழச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |

**வளநாடு : பாண்டிய குலாசனி வளநாடு**

| | | | | |
|---|---|---|---|---|
| விளாநாடு | . . . .தி மங்கலம் | ---- | 2 | ---- |
| விளாநாடு | மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| விளாநாடு | மலரியாகிய ஸ்ரீகண்டச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| இடையாற்று நாடு | இடையாற்று மங்கலம் | ---- | 2 | ---- |
| இடையாற்று நாடு | தொண்டவைச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| இடையாற்று நாடு | ? | ---- | 1 | ---- |
| ? | . . .சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |
| எயிநாடு | திருப்பேர் | ---- | 1 | ---- |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| **வளநாடு : நித்தவினோத வளநாடு** | | | | |
| நல்லூர் நாடு | ராஜகேசரிச் சதுர்வேதி மங்கலம் | 1 | 3 | ---- |
| காந்தார நாடு | விசையாலயச் சதுர்வேதி மங்கலம் | ---- | - | ---- |
| ஆவூர்க்கூற்றம் | இரும்புதலாகிய மனுகுல சூளாமணிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| ஆவூர்க்கூற்றம் | ஆமுத்திரவல்லி | ---- | 2 | ---- |
| முடிச்சோணாடு | ஜநநாதச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | 1+2 |
| ? | ? | ---- | 1 | ---- |
| வெண்ணிக்கூற்றம் | கீழ்ப்பூண்டியாகிய ஒலோக மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 2 | ---- |
| வெண்ணிக்கூற்றம் | பூவனூராகிய அவனி கேஸரிச் சதுர்வேதி மங்கலம் | ---- | 1 | ---- |

மொத்தம் நான்கு பண்டாரிகளும், கிட்டத்தட்ட நூற்று எண்பது (கல்வெட்டில் சில பகுதிகள் அழிந்துள்ளதால் திடமாகக் கூற முடியவில்லை) மாணிகளும், ஆறு கரணத்தார்களும், பன்னிரண்டு கீழ்க்கரணத்தார்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

✣✣✣✣✣

# விளக்கக் குறிப்புகள்

## 1. *பிரமதேயங்களிலார்*

பிரமதேயங்களில் உள்ளோர். பிரமதேயங்கள் பிராமணர்களுக்காகக் கொடையாக அளிக்கப்பட்டுப் பெரும்பாலும் பிராமணக்குடிகளையே கொண்ட ஊர்கள் ஆகும். இவ்வூர்களைப் பரிபாலிக்கச் சபைகள் (அல்லது அவைகள்) இருந்தன. கல்வி கேள்விகளில் சிறந்தும், குறிப்பிட்ட அளவு சொத்தும், வயதும், அனுபவமும் பெற்ற பிராமணப் பெரியோர்கள் இச்சபைகளில் உறுப்பினர்கள். ஊர்ப் பொதுச் செயல்கள் யாவும் இச்சபையோரே கவனித்து வந்தனர். இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள அத்தனை ஊர்களும் சபைகளைப் பெற்ற பிரமதேயங்களாகும். ஒவ்வொரு ஊரிலிருந்தும் சபையார் மூலம் இடச்கடவ பணியாளர்கள் எண்ணிக்கை வரிசையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கருவறை சம்பந்தமான ஊழியஞ் செய்பவர்கள் என்பதினால் இதில் குறிப்பிடப்பட்ட திருப்பரிசாரகர்கள், மாணிகள், பண்டாரிகள் ஆகியோர் பிராமணர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

## 2. *திருப்பரிசாரகர்*

கோயில் கருவறையில் பூஜை முதலியன செய்வோர். இவர்கள் யாவருமே மாணிகள் அதாவது பிரம்மச்சாரிகள். இவர்களில் பெரும்பாலோர் பின்னாளில் மாணி நிலையை விட்டுவிடுவார்கள் போல் தெரிகிறது. நிலையாக மாணி நிலையிலேயே இருப்பவர்கள் 'நிலையாம் தீக்ஷித்தார்' எனப்பட்டார்கள் போல் தெரிகிறது.

### 3. பண்டாரி

கருவறைப் பண்டாரத்துக்குப் பொறுப்புள்ளவர்களாகலாம்.

### 4. கரணத்தார்

இவர்கள் கருவறை சம்பந்தப்பட்ட கணக்குகளை மட்டும் எழுதுபவராக இருக்க வேண்டும். ஏனெனில் இவர்களைத் தவிர வேறு கணக்கர்களும் நியமிக்கப்பட்டார்கள் என்று முந்திய கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### 5. உள்ளூர்ப்பண்டாரம், நாட்டுப்பண்டாரம்

திருப்பரிசாரகர்களாக நியமிக்கப்பட்ட மாணிகள், கோயிலின் உள்ளூர்ப் பண்டாரத்திலிருந்தும் ஊதியம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. உள்ளூர்ப்பண்டாரம், நாட்டுப்பண்டாரம் ஆகியவற்றுக்குள்ளே வேறுபாடு என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. உள்ளூர்ப் பண்டாரம் கோயிலில் சொந்த நிலங்களிலிருந்து வந்த நெல்லைப் பெற்றும், நாட்டுப்பண்டாரம் கோயிலுக்காக (அரசன் ஆணைப்படி) சோழமண்டலத்திலிருந்த நாடுகள் யாவும் கொடுத்த நெல்லைப் பெற்றும் இருந்தனவாகக் கொள்ளலாம்.

### 6. நாடு, வளநாடு

இந்தக் கல்வெட்டு குறிக்கும் ஊர்கள் ஒவ்வொன்றும் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தது என்று கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து சோழ மண்டலத்தின் நாட்டுப் பிரிவுகளைப் பற்றி ஓரளவுக்கு அறிந்துகொள்ள இயலும்.

*****

# கல்வெட்டு எண்-4

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தின் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் உள்ளது. தமிழ் மொழியில் உள்ள இக்கல்வெட்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1041.

**கூற்று:** ராஜராஜீச்வரம் உடையார்க்குச் சோழ மண்டலத்திலுள்ள பிரமதேயங்களிலிருந்தும், ஊர்களிலிருந்தும் திருமெய்காப்பாளர்களை நியமித்து அவர்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள ஊர் மக்களே சூரியன் சந்திரன் உள்ளவரை ஊதியம் அளித்து வர வேண்டும் என்று ராஜராஜன் ஆணை பிறப்பித்ததைக் குறிக்கிறது. மெய்க்காப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆண்டுக்கு நூறு கல நெல் என விதிக்கப்பட்டது.

### *திருமெய்க்காப்பாளர்கள்*

அருமொழி தேவவளநாட்டு இங்கணாட்டு விமல சித்தமங்கலத்து சபையார், நென்மலி நாட்டு நெடுமணலாகிய மதனமஞ்சரிச் சதுர்வேதி மங்கலத்து சபையார், அதேநாட்டு குன்றியூர் சபையார், புறங்கரம்பை நாட்டு பல்லவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார், அதே நாட்டு செம்பியன் மஹாதேவிச்சதுர்வேதி மங்கலத்துச் சபையார், பெரும்பல மருதூர் சபையார், . . . . . ங்கலத்து ஊரார், . . கூற்றுத்துச் சிற்றாமூர் ஊரார், இ. . .ட்டுக் குறுக்கை சபையார்,

அளநாட்டுக் கீழையிலாகிய பரமேச்வர மங்கலத்து சபையார், செம்பியன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார் ஆகியோர் ஒவ்வொரு மெய்காப்பாரையும்,

க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் திருநறையூர் சபையார், அபிமான பூ'ணச் சதுர்வேதி மங்கலத்து சபையார்,. . . யகுடி சபையார், வண்டாழஞ்சேரி ஊரார், கூஞர் ஊரார், சேற்றூர்க் கூற்றுத்து சேற்றூர் சபையார், குடவாயில் சபையார், நாலூர் சபையார், இங்கணாட்டு இங்கண் சபையார் தேவூர்நாட்டுஆலத்தூர் சபையார், அளநாட்டு பெருங்கடம்பூர் சபையார், பாப்பார்குடி சபையார், பொருந்தம் போந்தை சபையார், பட்டினக்கூற்றத்துக் கொட்டாரக்குடி சபையார், திருக்கண்ணங்குடி சபையார், கள்ளூராகிய சன்னமங்கலத்து சபையார், மருகல் நாட்டு மருகல் சபையார், . . .க்குடி சபையார், பூதலூர் சபையார், வைப்பூர் ஊரார், தஞ்சாவூர் ஊரார், திருவாரூர்க் கூற்றத்து ஆடியப்பி மங்கலத்து சபையார், ராஜமல்லச் சதுர்வேதி மங்கலத்து சபையார், பெரும்போழ் ஊரார், பனையூர் நாட்டு புகலோக மாணிக்க சதுர்வேதி மங்கலத்துச் சபையார் ஆகியோர் ஒவ்வொரு மெய்க்காப்பாரையும்,

உய்யக் கொண்டான் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் தண்டத் தோட்டமான மும்முடிசோழச் சதுர்வேதி மங்கலத்து சபையார், பாம்பூர் நாட்டு பாம்புரத்து சபையார், கடையக்குடி சபையார், நல்லாவூர் ஊரார், அம்பர் நாட்டு அதியரைய குறும்பல் ஊரார், நல்லமுந்தூர் ஊரார், மருகல் நாட்டு மருதவூர் ஊரார், வெண்ணாட்டுத் திருமிழலை சபையார், வைகலாகிய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார்,

திருநல்லாத்து சபையார், கருவிலி ஊரார், வயலூர் ஊரார், திரைமூர் நாட்டுச் சாத்தலூர் சபையார், திருவழுந்தூர் நாட்டு அக்களூர் சபையார், அயிற்காட்டு ஊரார், விளைநாட்டு விளைநகராகிய நித்த வினோதச் சதுர்வேதி மங்கலத்து சபையார், பெருமுளை சபையார், திரைமூர் ஊரார், ஆக்கூர் நாட்டு ராஜேந்திர சிம்மச் சதுர்வேதி மங்கலத்து சபையார், தலைச்சங்காட்டு சபையார், திருக்கடவூர் சபையார், குறும்பூர் நாட்டுத் தளிச்சேரியான பராக்கிரமசோழச் சதுர்வேதி மங்கலத்து சபையார், இறையான்சேரி சபையார், தேவதானம் திருவிடைக்கழி சபையார், நெடுங்காட்டு ஊரார் ஆகியோர் ஒவ்வொரு மெய்காப்பாரையும், தேவதானம் திருவிடைக்கழி சபையார் மட்டும் மூன்று மெய்காப்பாரையும்;

ராஜேந்திர சிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டு கண்டராதித்யச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இரண்டு மெய்காப்பார்களையும், பெரும்புலியூர் சபையார் ஒரு மெய்காப்பாரையும், மிறைக்கூற்றுத்து பார்த்திபசேகரச் சதுர்வேதி மங்கலத்து சபையார் ஒரு மெய்காப்பாரையும், அண்டாட்டுக் கூற்றத்து பண்டித சோழச் சதுர்வேதி மங்கலத்து சபையார் ஒரு மெய்காப்பாரையும், சத்தி மங்கலத்து ஊரார் ஒரு மெய்காப்பாரையும், இன்னம்பர் நாட்டு பழைய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார், அசுகூர் சபையார், கோட்டையூர் சபையார், ஏராகிய மும்முடி சோழமங்கலத்தார் ஆகியோர் ஒவ்வொரு மெய்காப்பாரையும், பராந்தகச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இரண்டு மெய்காப்பார்களையும மிழலை நாட்டுச் சேய்நல்லூர் சபையார், மண்ணி நாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்ய மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார், வெம்பற்றூராகிய

அவனிநாராயணச் சதுர்வேதி மங்கலத்து சபையார், இடவை சபையார், பனந்தாடி சபையார், விளத்தூர் நாட்டுக் காட்டூர் சபையார், கார் நாட்டு . . . . . . . . சபையார் ஆகியோர் ஒவ்வொரு மெய்காப்பாரையும், தனியூர் ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்து சபையோர் ஆறு மெய்காப்பார்களையும், குறுக்கை நாட்டு குறுக்கை சபையார், காவிரி மங்கலத்து சபையார், காட்டியார் பிரமதேயத்து சபையார், வரகூர் சபையார், கடலங்குடி சபையார், திருவாலி நாட்டு மல்லிகுடி சபையார், திருவாளி சபையார், திருவிந்தளூர் நாட்டு. . . . சபையார், திருநன்றியூர் சபையார், மாற்பிடுகுதேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையார், கஞ்சாற நகர் ஊரார், வெண்ணையூர் நாட்டு பெருங்கண்பூர் சபையார், மாதுலவேளூர் சபையார், . . . . சபையார், வெள்ளூர் சபையார், சோதியக்குடி சபையார், திருக்கழுமல நாட்டு உதையாதித்யச் சதுர்வேதி மங்கலத்து சபையார், திருக்கழுமலத்து சபையார், தேனூர் சபையார், ஆகியோர் ஒவ்வொரு மெய்காப்பாரையும், நாங்கூர் நாட்டு நாங்கூர் சபையார் இரண்டு மெய்காப்பார்களையும், குன்றத்து சபையார், மருதூர் சபையார் ஒவ்வொரு மெய்காப்பாரையும் அதிகைமங்கை நாட்டு பெருந்தோட்டத்து சபையார், கொண்ட நாட்டு பஞ்சவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து இரண்டிரண்டு மெய்க்காப்பார்களையும், நெலுவூர் நாட்டுக் குமராதித்யச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், பிடவூர் நாட்டு நயதீரமங்கலத்துச் சபையார், வேசாலிப்பாடி நாட்டு ஜயங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், இருங்கோளப்பாடி வளவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், ராஜாச்ரய வளநாட்டு மீய்மலை மகேந்திர மங்கலத்துச் சபையார் ஆகியோர் ஒவ்வொரு மெய்காப்பரையும்,

ராஜாச்ரய வளநாட்டு வடவழிநாட்டுத் திருவெள்ளறைச் சபையார் இரண்டு மெய்க்காப்பாரையும், பாச்சிற் கூற்றத்துக் கீழ் பிலாற்றுப் பெருமருதூர்ச் சபையார் ஒரு திருமெய்க்காப்பாரையும் அளிக்க வேண்டுமென உத்தரவிடப் பட்டிருந்ததைக் குறிக்கிறது.

இக்கல்வெட்டின் தொடர்ச்சியை எழுதுவதற்கு இடம் போதாமையால் இராஜராஜன் திருவாசலில் தெற்கு, அக்னிதேவர் ஆலயத்துக்கு வடக்கில் ஆதிபூமியில் கபோதத்தின் கீழ்ப்புறத்தில் தொடங்கி எழுதப் பெற்றிருக்கிறது என்பதையும் தெரிவிக்கிறது.

## விளக்கக் குறிப்புகள்

### *பிரமதேயங்கள், ஊர்கள்*

இவ்விரண்டு பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டுப் பகுதி சிதைந்துள்ளது. ஆயினும் பின்னால் காணப்படும் ஊர்ப் பெயர்களிலிருந்து இவ்விருவகையான ஊர்களும் முதலிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன என யூகிப்பதில் தவறில்லை. ஊர் என்ற சொல் பொதுவாகப் பார்க்கும் பொழுது ஒரு மக்கள் குடியிருப்பைக் குறிக்கும். அந்த வகையில் பிரமதேயமும் ‘ஊர்’ தான். இப்படிப் பொதுப்படையான பொருளில் பல கல்வெட்டுகளில் ‘ஊர்’ என்ற சொல் கையாளப் பட்டிருக்கிறது என்பதும் உண்மையே. ஆனால் சில கல்வெட்டுகளில் (இந்தக் கல்வெட்டையும் சேர்த்துக் கொள்ளலாம்) பிரமதேயங்கள், ஊர்கள் இரண்டும் சேர்ந்து

வருகின்றன. இந்த இடங்களில் 'ஊர்கள்' பிரமதேயங்களைச் சாராது வேறு தன்மையைப் பெற்றவை என்பது தெளிவாகும். பல கல்வெட்டுகளைக் கூர்ந்து ஆய்ந்த வரலாற்றாசிரியர் 'ஊர்கள்' என்பவை நிலவரி செலுத்தக் கூடிய வேளாள நில உடைமையாளர்கள் பெரும்பான்மையாக வாழும் குடியிருப்புகளாகும் என்று வரையறுக்கின்றனர். பிரமதேயத்தைப் பற்றி மேலே ஒரு கல்வெட்டில் பார்த்தோம். பிரமதேயங்களில் ஆட்சிப் பொறுப்புக்களைச் சபையார் பார்த்துக் கொண்டதைப் போல, 'ஊர்களில்' ஊரார் என்ற குழுவினர் ஆட்சிப் பொறுப்புகளைப் பார்த்துக் கொண்டார்கள். வண்டாழஞ்சேரி ஊரார், கூளூர் ஊரார், கற்குடி ஊரார் என்று வருவதைக் கவனிக்க. பிரமதேயங்களில் பெயர்கள் மங்கலம், சதுர்வேதி மங்கலம் என்று பின்னொட்டைப் பெற்றிருக்கும். ஆனால் 'ஊர்களில்' பெயர் பெரும்பாலும் இயற்பெயர்களாகவே இருப்பதைப் பார்க்கலாம்.

## தனியூர் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம்

பிரமதேயங்களாகட்டும், ஊர்களாகட்டும் யாவுமே ஏதாவது ஒரு நாட்டைச் சேர்ந்தே இயங்கும். ஆனால் இவைகளில் சில, ஒருசில முக்கிய தன்மைகளால் (அரசர்களின் நேரடிப் பராமரிப்பு, சமய முக்கியத்துவம் போன்றவைகள்) அளவில் மிகப் பெரியனவாக வளர்ந்து விடுவதுண்டு. அந்த நிலையில் 'நாடுகள்' பார்த்து வந்த அரசியல் செயலுரிமைகளை இந்த ஊர்கள் பெற்று விடுவதுண்டு. இந்த ஊர்கள் சார்ந்துள்ள நாடுகள் இந்த ஊர்களைப் பொறுத்தவரை செயலற்றவையாகி விடுகின்றன. இந்த நிலைமையேற்படும் பொழுது இந்த ஊர்கள் (பிரமதேயங்களும் கூட) தனியூர் என்ற தகுதியைப் பெறுகின்றன. அதாவது எந்த நாட்டையும் சாராது தனித்து

இயங்கும் ஊர்கள் என்று பொருள். பிரமதேயமான வீர நாராயணச் சதுர்வேதி மங்கலம் ஒரு தனியூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய ஊர் என்பது இந்த ஊர் மட்டும் ஆறு திருமெய்க்காப்பார்களை இட்டது என்பதிலிருந்தே தெரியவரும். மற்ற ஊர்கள் அதிகமாகப் போனால் மூன்றுக்கு மேல் இடவில்லை. சென்ற கல்வெட்டில் இந்த ஊர் ஒரு பண்டாரியையும் 12 மாணிகளையும் கோயிலுக்கு அனுப்பியதைப் பற்றிய செய்தி உள்ளது.

## இருங்கோளப்பாடி

ராஜேந்திர சிம்ம வளநாட்டு இருங்கோளப்பாடி என்று குறிக்கப்படும் இந்த நிலப்பிரிவு சிதம்பரம் வட்டத்தின் மேற்பகுதி, உடையார்பாளையம் வட்டம், லால்குடி வட்டத்தின் கீழ்ப்பகுதி ஆகியவைகளை உட்கொண்டது. இருங்கோவேள் மரபினரின் ஒரு பிரிவு இதனைத் தங்கள் ஆட்சிப் பகுதியாகக் கொண்டிருந்ததால் இது இப்பெயர் பெற்றிருதல் வேண்டும். ஆனால் சோழர் காலத்தில் இதை வைத்திருந்த இருங்கோவேள் மரபினரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ராஜராஜன் ஆட்சிக் காலத்துக்குப் பின்பு இந்தப் பகுதி ஒரு வளநாட்டுப் பிரிவில் அடக்கப்பட்டதன் காரணமாக இதற்கு இருந்து வந்த அரசியல் முக்கியத்துவம் மறைந்துவிட்டது.

## வேசாலிப்பாடி

வேசாலிப்பாடியும் ராஜேந்திர சிம்ம வளநாட்டைச் சேர்ந்ததாகக் குறிக்கப்படுகிறது. ராஜராஜன் ஆட்சியில் 'வளநாடுகள்' ஏற்படுத்தப்பட்ட பொழுது காவிரிக்கு வடகரையில் தென் பெண்ணையாறு வரை இருந்த நிலப்பகுதியில் பெரும்பகுதி ராஜேந்திர சிம்ம வளநாடு என்ற ஒரு வளநாட்டில்

சேர்க்கப்பட்டது (பின்னால் இது இரண்டு வளநாடுகளாக மாற்றப்பட்டன). அந்த வகையில் இருங்கோளப்பாடி, வேசாலிப்பாடி, திருமுனைப்பாடி, அருவாநாடு முதலியவை ராஜேந்திர சிம்ம வளநாட்டில் சேர்க்கப்பட்டன. வேசாலிப்பாடி இன்றைய கடலூர் வட்டத்தில் கடற்கரையோரமாக இருந்த ஒரு சிறு பகுதியாகும். இதனுடைய வடக்குப் பகுதி முதலில் அருவா நாட்டினைச் சேர்ந்ததாக இருந்தது. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருவாநாடு கூறாக்கப்பட்டு அதன் ஒரு பகுதி வேசாலிப்பாடியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இப்படிச் செய்தவர் 'வேசாலி' என்ற வம்சம் அல்லது குலத்தைச் சேர்ந்த குறுநிலத் தலைவர்களாவர். இந்த வேசாலி வம்சத்தைச் சேர்ந்த ஒருவன் நிருபதுங்கவர்மப் பல்லவனின் பாகூர் செப்பேடுகளில் குறிக்கப்படுகின்றான்.

*****

# கல்வெட்டு எண்-5

சென்ற கல்வெட்டினைப் போலவே இந்தக் கல்வெட்டும் தஞ்சைக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட ஊர்களின் காணிக்கடன்களைக் குறிக்கிறது. முந்திய கல்வெட்டின் தொடர்ச்சியாகவே இதைக் கொள்ளலாம். இதில் மொத்தம் பதினெட்டு ஊர்களிலிருந்து கோயிலுக்கு வரவேண்டிய காணிக்கடன்களின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன : வடகரை ராஜேந்திர சிங்கவளநாட்டு இன்னம்பர் நாட்டுக் கருப்பூர், திருவாலிநாட்டுத் திருத்தேவன்குடி, குறுவாணியக்குடி, மழநாடான ராஜாச்ரய வளநாட்டுப் பாச்சிற்கூற்றத்து மீய்பலாற்று ஆன்பனூர், கீழ்பலாற்று ஈங்கையூர் பனமங்கலம், சாத்தந்பாடி, துறையூர், காரிமங்கலம், கலாரக்கூற்றத்து மாந்தோட்டம், இறையான்சேரி, வெண்கோன் குடிக்கண்டத்து வெண்கோன்குடி, மாகாணிக்குடி, செம்புறைக் கண்டத்துச் சிறுசெம்புறை, நித்தவினோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நகரம் வெண்ணி, அருமொழிதேவ வளநாட்டு தக்களூர் நாட்டுச் சாலாபோகம் கொடிமங்கலம், நகரம் விடேல்விடுகு பல்லவபுரம். மொத்தம் 18 ஊர்களின் விவரம் இதில் கொடுக்கப்பட்டுள்ளது. (ஓர் ஊரின் பெயர் சிதைந்து விட்டது).

## விளக்கக் குறிப்புகள்

**சாலாபோகம்**

அறச்சாலைகளுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடை. வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்கும் சாலைகள் அறச்சாலைகள் ஆகும். இச்சாலைகளில் பிராமணச் சிறுவர்களுக்கு வேதக்கல்வி புகட்டப்படுவதும் உண்டு.

**வெள்ளாண்வகை**

இறைகட்டும் அதாவது வரிகட்டும் நிலவகை, வேளாளர்கள் தாங்களாக வரி செலுத்திப் பயிர் செய்து வரும் நிலம். 'கருப்பூர் தேவதானமும் சாலாபோகமும் நீக்கி வெள்ளான் வகையாய் வருகின்ற நிலம்' என்ற தொடருக்குப் பொருள்; கருப்பூரில் முதலில் இறைகட்ட வேண்டாதவையாக இருந்த தேவதான, சாலாபோக நிலங்கள் பின்னால் இறைகட்டும் வெள்ளான் வகை நிலங்களாக மாற்றப்பட்டன என்பது.

**குடதேவர்**

கும்பமுனி அதாவது அகஸ்தியராக இருக்கலாம்.

**நீங்கல்**

ஊர்ப் பொதுச் செயல்களுக்காக இறைகட்டும் நிலையிலிருந்து நீக்கப்பட்ட (விலக்கப்பட்ட) நிலம்.

**சேட்டையார் கோயில்**

தானியக் களஞ்சியம், கால்நடைகள் கட்டப்படும் தொழுக்களாகவும் கொள்ளலாம்.

**ஏறின**

சேர்ந்த.

*****

# கல்வெட்டு எண்-6

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் வடக்குச் சுற்றுச்சுவரில் வெளிப் பக்கத்தில் உள்ளது. தமிழ் மொழியில் உள்ள இக்கல்வெட்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1014.

**கூற்று :** ராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருவிளக்கு அமைப்பதற்காக, (1) இராஜராஜ தேவர் கொடுத்த கால்நடைகள், (2) பிறர் கொடுத்துள்ள கால்நடைகள், (3) காசு கொடுத்து வாங்கப் பெற்ற கால்நடைகள் ஆகியவைகளை இடையர்களிடம் கொடுத்து அவற்றின் மூலம் திருவிளக்கு நெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டதைக் குறிக்கிறது. திருவிளக்கு ஒன்றுக்கு நெய் அட்டுவதற்கு ஆடென்றால் தொண்ணூற்றாறு, பசு என்றால் நாற்பத்தெட்டு, எருமை என்றால் பதினாறு என்ற விகிதத்தில் இடையர்களிடத்தில் தரப்பெற்றன. பசுவோடு தரப்படும் பசுவின் கன்றும், எருதும் பசுவாகவே கணக்கிடப்பட்டன. ஆடுகளோடு தரப்பட்ட குட்டியும், கிடாயும் ஆடுகளாக எண்ணப்பட்டன. அதைப்போன்றே எருமை கன்றும், கிடாவும் எருமைகளாகச் சேர்க்கப்பட்டன. இம்முறையில் மாடுகளைப் பெற்றுக் கொண்ட இடையர், அவரது உறவினர், அவர்களைச் சார்ந்துள்ளவர்கள் ஆகியோர் சூரியன், சந்திரன் உள்ள வரை கோயில் கருவூலத்தே திருவிளக்கு ஒன்றுக்கு ஆடவல்லான் என்ற அளவுக் கலத்தால் ஒவ்வொரு நாளும் ஓர் உழக்கு என்ற விகிதத்தில் நெய் அளக்க வேண்டும் என்று அரசன் கட்டளை பிறப்பித்தான்.

ராஜராஜதேவர் கொடுத்த கால்நடையில் யார் யாருக்கு எவ்வளவு அளிக்கப் பெற்று நெய் எவ்வளவு அளக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது என்பதைக் கீழே காண்போம்.

1. தஞ்சாவூர்ப் புறம்படி (தஞ்சைப் புறநகர்) காந்தர்வத் தெருவில் இருக்கும் இடையன் சூற்றி பாக்கரனிடம் (பாஸ்கரனிடம்) நாற்பத்தெட்டு பசுக்கள் தரப்பெற்று ஒரு விளக்குக்கு நெய் கொடுக்க வேண்டுமென்று கூறப்பெற்றது.

சூற்றி பாக்கரனும், இவனுடைய அடைகுடிகளாக (பொறுப்பின் கீழ் உள்ளகுடி) இவன் உடன் பிறந்தார்கள் நாரணனும், சூற்றி சீராளனும்;

சிற்றப்பன் மகன் சோலை குரவனும், காவிரி ஆற்றின் வடகரையிலே உள்ள குன்றக் கூற்றமான உத்துங்கத்துங்க வளநாட்டுப் பழுவூரில் வாழும் இடையன் தாழி நெத்தானனும் ஆக ஐவரும் ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளக்க வேண்டுமாய்க் கோரப்பட்டது.

2. நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பெருங்கறை என்ற ஊரில் வாழும் ஆனை சாத்தனுக்கு நாற்பத்தெட்டுப் பசுக்கள் தரப்பெற்று ஒரு விளக்குக்கு நெய் அளக்க வேண்டுமாய்க் கூறப்பட்டது.

ஆனை சாத்தனும், இவன் அடைகுடிகளான இவன் உடன் பிறந்தான் ஆனை செல்வனும்;

நித்த வினோத வளநாட்டுக் கரம்பை நாட்டுக் குந்தவை நல்லூரில் வாழும் இடையன் பிரமன் செவ்வாய் மணியும்;

இவ்வூர் இடையன், ஆச்சன், நக்கனும் ஆகிய ஐவரும் ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளக்க வேண்டுமாய்க் கோரப்பட்டது.

3. தஞ்சாவூர்ப் புறம்படி மடைப்பள்ளித் தெருவில் இருக்கும் இடையன் பனையன் தெற்றிக்குப் பசுக்கள் நாற்பத்தெட்டு தரப்பெற்று ஒரு விளக்குக்கு நெய் அளக்க வேண்டுமாய்க் கூறப்பட்டது.

பனையனும் இவன் அடைகுடிகளான இவன் உடன் பிறந்தான் பனையன் வெண்காடனும்;

இத்தெருவில் வாழும் இடையன் கொன்றை நீலனும்;

தஞ்சாவூர்ப் புறம்படி இராஜவித்யாதரப் பெருந்தெருவில் வாழும் ஊரன் வேம்பனும்;

பாண்டிய குலாசதி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் கிள்ளிகுடி என்னும் ஊரில் இருக்கும் இடையன் நீலன் அங்காடியும் ஆகிய ஐவரும் ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளக்க வேண்டுமாய்க் கோரப்பட்டது.

4. பாண்டிய குலாசநி வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக் கிள்ளிகுடி என்னும் ஊரில் வாழும் இடையன் நக்கன் பூதிக்கு நாற்பத்தெட்டு பசுக்கள் தரப்பெற்று ஒரு விளக்குக்கு நெய் அளக்க வேண்டுமாய்க் கோரப்பட்டது.

இடையன் நக்கன் பூதியும் இவன் அடைகுடிகளாக இவன் உடன் பிறந்தான் நக்கன் தூதுவனும் உடன் பிறந்தான் மகன் காளி நக்கனும் தஞ்சாவூர்ப் புறம்படி உத்தம சீலியார் வேளத்தில் இருக்கும் இடையன் மருவூர் அரையனும் தஞ்சாவூர்ப் புறம்படி வீரசோழப் பெருந்கெருவில் வாழும்

இடையன் சுவரன் அனந்தனும் ஆகிய ஐவரும் ஒவ்வொரு நாளும் உழக்கு நெய் அளிக்க வேண்டுமாய்க் கூறப்பட்டது.

இவ்வாறு மொத்தம் 59 பேர்களிடம் ஆளுக்கு 48 பசுக்கள் தரப்பட்டு நாள்தோறும் உழக்கு நெய் அளிப்பதற்கு ஆணைப் பிறப்பிக்கப்பட்டது.

வேறு 14 பேர்களிடம் ஆளுக்கு 96 ஆடுகள் தந்து நித்தம் உழக்கு நெய் அளப்பதற்கு ஆணை பிறபிக்கப்பட்டது.

3 பேருக்கு ஆளுக்கு 8 எருமைகளும், 48 ஆடுகளும், ஒருவரிடத்தில் 2 எருமைகளும், 84 ஆடுகளும், ஒருவரிடத்தில் 4 எருமைகளும், 72 ஆடுகளும் தரப்பட்டன. மொத்தம் 78 பேர்களிடத்தில் தரப்பட்டுள்ளன. 59 பேர்களிடத்தில் ஆளுக்கு 48 பசுக்கள் வீதம் மொத்தம் 2832 பசுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 14 பேர்களிடத்தில் ஆளுக்கு 96 ஆடுகள் வீதம் 1344 ஆடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 5 பேர்களிடத்தில் எருமையும், ஆடுகளுமாகச் சேர்த்துத் தரப்பட்டுள்ளன. மொத்தம் 30 எருமைகளும் 300 ஆடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் ஆடுகளாகக் கொண்டால் மொத்தம் 7498 எண்ணிக்கை வரும்.

பசுக்களையும், ஆடுகளையும், எருமைகளையும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. பசுவானால் 48, ஆடானால் 96, எருமையானால் 16 என்ற விகிதத்தில் தந்திருக்கிறார்கள். அதிலிருந்து கீழ்வரும் விகிதம் பெறப்படுகிறது. நெய்யளவை வைத்து இந்தக் கணக்கு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதாவது ஓர் எருமையின் வெண்ணெய் மூன்று பசு அல்லது ஆறு ஆடுகளின் வெண்ணெய்க்குச் சமமாகக் கொண்டுள்ளார்கள்.

*****

# கல்வெட்டு எண்-7

இக்கல்வெட்டு தஞ்சைப் பெருவுடையார் கோயில் வடக்குச் சுவரின் வெளிப் பக்கத்தில் உள்ளது. தமிழ் மொழியில் உள்ள இக்கல்வெட்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1014. (?)

**கூற்று :** இராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருவிளக்கு அமைப்பதற்காக உடையார் இராஜராஜதேவர் கொடுத்த கால்நடைகள்; பிறர் கொடுத்த கால்நடைகள்; பலர் காசும், அக்கமும் கொடுத்து அதனால் வாங்கப்பெற்ற கால்நடைகள் ஆகியவற்றை இடையர்களிடம் கொடுத்து அவற்றின் மூலம் திருவிளக்குக்கு நெய் வழங்க அரசன் ஆணை பிறப்பித்ததைக் குறிக்கிறது.

சென்ற கல்வெட்டைப் போலவே இதுவும் இராஜராஜீச்வரம் கோயில் விளக்குகளுக்கு நெய் அளக்கச் செய்த ஏற்பாட்டை விரிவாகக் குறிக்கிறது. முதற் கல்வெட்டில் இடையர்களுக்குப் பங்கிடப்பட்டவை இராஜராஜனே கொடுத்த கால்நடைகள் ஆகும்.

இந்தக் கல்வெட்டில் அரசன் கொடுத்தவைகளோடு அரசனின் அதிகாரிகளும், மற்றவர்களும் கொடுத்தவைகளும்; கோயிலுக்கு முன்பே கொடுக்கப்பட்ட காசுகளில் ஒரு பகுதியைக் கொண்டு விலைக்கு வாங்க வேண்டிய கால் நடைகளும் பல்வேறு இடையர் குழாங்களுக்குப் பங்கிடப்பட்ட செய்தியுள்ளது. ஒவ்வொரு விளக்குக்கும் 96 ஆடுகள் அல்லது அதற்குச் சமமான பசுக்கள் அல்லது எருமைகள் கொடுக்கப்பட்டன. மொத்தம் எண்பத்திரண்டு விளக்குகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மொத்த ஆடுகளின் எண்ணிக்கை 7872 ஆகும்.

❋❋❋❋❋

